# பாரத கீதம்



கவியோகி சுத்தானந்த பாரதியார்

# பாரத கீதம்

(புதிய தேசிய கீதங்கள்)

கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

புதுயுக நிலையம்
புதுச்சேரி

முதற் பதிப்பு. ஜனவரி, 1951.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1534
எண்: 1534



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

அச்சிட்டோர் :— மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்.

# பதிப்புரை

**பாரத** தேசம் இன்று சுதந்தரமான குடியரசு; நேற்று பட்ட சிறுமை மாறி, அடிமைச் சங்கிலி அறுந்து நொறுங்கி பாரத நாடு இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. உலகிற் கெல்லாம் அருளொளி காட்டி அபயமளிக்கிறது. பாரத சக்தி, இந்த அணுகுண்டு யுகத்தில் ஆத்ம சக்தியால் விடுதலை பெற்று, உலகிற்கெல்லாம் ஆன்மநேய ஒருமையைக் காட்டும் நமது தாய்நாட்டின் பெருமையே பெருமை. புதுமை பெற்ற பாரத நாட்டிற்கே இந்தப் பாரத கீதம் எழுந்தது! இனி பாரத நாடு செய்யவேண்டிய பெருஞ் செயல்களுக்கும் கடமைகளுக்கும் ஊக்கமும் ஆக்கமும் உணர்ச்சியும் தருவன இக் கீதங்கள்.

இக் கீதங்களைப் பாடிய கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரை உலகம் நன்கு அறியும். இக்கீதங்கள் அவரது மாசற்ற தேச பக்தியின் விளக்கமாகும். இவையே நவ பாரதத்தின் ஜயமுரசும் ஆகும். பாடுவோம், முன்னேறு வோம், வெற்றி பெறுவோம். ஜய பாரத சக்தி!

புதுச்சேரி
1—1—1951

புதுயுக நிலயம்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஜய ஜய ஹிந்தென | 1 |
| 2. | ஜயபாரத | 2 |
| 3. | நானிலத்தின் மேனிலம் | 3 |
| 4. | எந்தாய் வாழ்க! | 4 |
| 5. | ஜயபாரத | " |
| 6. | வந்தனம் இந்தியத் தாயே | 5 |
| 7. | ஜயம் ஜயம் | 6 |
| 8. | பாரத தேசம் என்றால் | " |
| 9. | பாரீர் பாரத நாடு | 7 |
| 10. | புண்ணியர் நாடே! | 8 |
| 11. | பாரத தேசம் | " |
| 12. | வாழிய பாரதமே! | 9 |
| 13. | சிவனிருக்கும் | 10 |
| 14. | புண்ணிய பூமி | 11 |
| 15. | பொலிக! பொலிக!! | " |
| 16. | துந்துமி முழங்கிடுவோம் | 12 |
| 17. | ஞானபூமி பாரதம் | 13 |
| 18. | சுதந்தர ஹிந்துஸ்தானம் | " |
| 19. | இந்திய நாடு | 14 |
| 20. | நாமே பாரத நாடு | 15 |
| 21. | ஜயமுரசு | 16 |
| 22. | பாரத கண ராஜ்யம்! | 17 |
| 23. | நமது குடியரசு | " |
| 24. | சொக்கும் சுடர்நகை | 18 |
| 25. | துள்ளி விளையாடும் | 19 |
| 26. | துள்ளித் துள்ளி வா வா! | 20 |
| 27. | முன் செல்! | 21 |
| 28. | சக்தியன்னை | 22 |
| 29. | கொஞ்சும் குழந்தையின் உள்ளம் | 23 |

| | | |
|---|---|---|
| 30. | நல்ல குறி சொல்லுகிறேன் | 24 |
| 31. | சுத்த சக்தி | „ |
| 32. | வெள்ளி வெளுத்தது! | 25 |
| 33. | பள்ளுக் கொட்டுவோம் | 26 |
| 34. | அகரவுயிரை | 27 |
| 35. | உலகினுக்கே | „ |
| 36. | தங்க வளங்கள் | 28 |
| 37. | அருணைச் சிலை | „ |
| 38. | ஒன்றே உயிரும் | 29 |
| 39. | இதுவே பாரத தர்மம் | 30 |
| 40. | தேவி பாரதி | 31 |
| 41. | சக்கரக் கண்ணனே வா! | 32 |
| 42. | தொண்டினிலே இன்பம் | 33 |
| 43. | எத்தனை காலமாய் | 34 |
| 44. | ஏழைகள் யார் | 35 |
| 45. | சக்கரம் சுழற்றிடுவோம் | „ |
| 46. | ஹரிஜன சேவை | 36 |
| 47. | தைரியமா யிருங்கள் | 37 |
| 48. | கங்காணி பேச்சை நம்பி | 38 |
| 49. | உரிமை யுண்டு | 39 |
| 50. | சத்தியமும் அன்பும் | 40 |
| 51. | ஸ்ரீராம ராஜ்யம் | „ |
| 52. | தேச சுதந்தர தியாகிகள் | 41 |
| 53. | திலகர் போற்றி | 42 |
| 54. | வீரச் சிதம்பரம் | 43 |
| 55. | ஜய ரவீந்த்ர | „ |
| 56. | முத்தினிலே வந்த | 44 |
| 57. | உலகினும் பெரியவனே | 45 |
| 58. | எந்தை மகாத்மா காந்தி | 46 |
| 59. | வாழிய காந்தி மகாத்மா | „ |
| 60. | ஜெய ஹிந்தென | 48 |
| 61. | பிறந்த நாடு | „ |

| | | |
|---|---|---|
| 62. | வானக்குடை நிழலில் | 49 |
| 63. | சுகந்தாராய் | 50 |
| 64. | தீப ஒளி | ,, |
| 65. | தேச பக்தர் | 51 |
| 66. | ஊருக்குழைத்திட | 52 |
| 67. | ஒன்றிய வாழ்வு | 53 |
| 68. | கனவு நனவாமோ ! | ,, |
| 69. | நடனம் புரிவோம் | 54 |
| 70. | எட்டுத் திக்கும் | 55 |
| 71. | வெட்டு மின்னல் | ,, |
| 72. | மூவுலகும் | 56 |
| 73. | நல்ல குடியரசு | 57 |
| 74. | பொங்குக பொங்கு | ,, |
| 75. | தொண்டு செய் | 58 |
| 76. | செல்வ மழை | 59 |
| 77. | மூடப் பழக்கம் | ,, |
| 78. | வீர கர்ஜனை செய் | 60 |
| 79. | கண்கள் விழித்தெழுந்தோம் | 61 |
| 80. | காதலிலே | 62 |
| 81. | கலையழகி வந்தாள் | 63 |
| 82. | பொங்குக தேன்வளம் | 64 |
| 83. | பொலிவான பூமியிலே | 65 |
| 84. | தொல்லுலகத்த | 66 |
| 85. | வாழிய கிறிஸ்து | ,, |
| 86. | சமாஜம் | 67 |
| 87. | நல்லது | 68 |
| 88. | போற்றி போற்றி | 69 |
| 89. | காவாய் கருணைக் கடலே | ,, |
| 90. | பல்லாண்டு பல்லாண்டு | 70 |
| 91. | நீடு வாழலாம் | 71 |
| 92. | நல்ல குடியரசு | ,, |
| 93. | நிரந்தரம் | 72 |

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை.

உ

# பாரத கீதம்

## 1. ஜய ஜய ஹிந்தென

தந்தலவாாளி | ஆதி தாளம்

**பல்லவி**

ஜய ஜய ஹிந்தென
சிங்க நாதம் செய்வோம்
ஜெயசுப மலர் பெய்வோம்—ஜய (ஜய ஜய)

**அனுபல்லவி**

பயம்இனி இல்லை பந்தம் இல்லை
பரமா னந்த சுதந்தரத்தினிலே (ஜய)

**சரணங்கள்**

அடிமை விலங்கை அறுத்தோம்—பாழும்
மடமை யிருளைச் சிதைத்தோம்
இடியும் புயலும் கொடிய சிறையும்
எமனும் குமைய அமைதி கண்டோம் (ஜய)

பிச்சை வாழ்வை வெறுத்தோம்—மனப்
பிழைகளை வேரறுத்தோம்
அச்ச மற்ற அமர நிலையில்
அறிவுந் திருவும் அமுதும் உண்டோம் (ஜய)

மத வெறிகளின்றி—இங்கே
மன்னுயிர்கள் ஒன்றி
இதய வெளியில் இறைவனுடனே
ஏக போக யோகந் துய்த்தோம். (ஜய)

## 2. ஜய பாரத!

யமுனா கல்யாணி — ரூபகம்

**பல்லவி**

ஜய பாரத, விஜயீபவ!
என ஹாரதி எடுப்போம் (ஜய)

**சரணங்கள்**

அன்புக் குழலை ஊதுவோம்
ஆத்ம நேசம் ஓதுவோம்
துன்ப மில்லை அச்சம் இல்லை
சுதந்தரப் பல்லாண் டிசைப்போம் (ஜய)

அருணசாந்த யாழிலே
அமர வேதம் பொழியுமே
கருணையுண்டு கடவு ளுண்டு
கருத்தில் வீரக் கனலும் உண்டு (ஜய)

பாலையெல்லாம் சோலையே
பாக்கமெல்லாம் ஆலையே
வேலையுண்டு கூலியுண்டு
வேண்டிய கலைகள் உண்டு (ஜய)

சினப் பகையை வென்றோம்—
சீறும் கூற்றைக் கொன்றோம்
மனமும் ஒன்றி இனமும் ஒன்றி
மனிதர் ஒன்றி நன்று வாழ்வோம் (ஜய)

வீடெலாம் தொழிலிசை
வீதியெல்லாம் கலையிசை
நாடெல்லாம் திருமகள்
நடஞ்செய்யும் அரங்கமே (ஜய)

தேசமக்கள் வாழ்வெல்லாம்
தியாக தீப ஜோதியே
ஆசியாவின அமர சக்தி
ஆத்மசக்தி எம்மதே (ஜய)

# 3. நானிலத்தின் மேனிலம்

கமாண்டு ஆதி தாளம்

நானி லத்தின் மேனிலம்
நமது ஹிந்துஸ் தானம்
நமது ஹிந்துஸ் தானம்—இதன்
நாமம் அமுத பானம்

தேனும் பாலும் கன்னலும்
செழித்த தேவ லோகம்
செழித்த தேவ லோகம்—இதன்
சேவை எங்கள் மோகம்.

முப்புறமும் வாழி கூறி
முத்திரைக்கும் வாழி—செல்வக்
கப்பல் ஓடும் ஆழி—மனக்
கவலை போக்கும் ஆழி—

எப்புறமும் அழகும் கலையும்
அருளும் பொலியு நாடே—உண்மை
அறம் விளங்கும் வீடே—எங்கள்
அன்னைக் குண்டோ ஈடே.

இந்தியாவை எண்ண எண்ண
எம்முளம் சிலிர்க்கும்—சக்தி
ஏறிவீரம் குதிக்கும்—அஞ்சி
எதிரியுள்ளம் பதைக்கும்

வந்தே மாதரம் எனறன்பு
மந்த்ர பேரி வீறும்—விண்ணும்
மண்ணும் ஆசி கூறும்—தெய்வ
வரங்க ளெல்லாம் சேரும்.

## 4. எந்தாய் வாழ்க!

பேஹாக் ஆதி தாளம்

எந்தாய் வாழ்க எனும் மந்திர நாதமே
இன்பததை ஊட்டுதம்மா—எங்கள்
இந்தியப் பாசுரத் தென்றல்வந் திதயத்தின்
தந்தியை மீட்டுதம்மா.

அன்னை இயற்கையின் புன்னகை அழகிலே
அமுதம் சுரக்கு தம்மா—அவள்
வன்ன மலைநதி வனங்களில் ஆனந்த
ஞானம் பிறக்கு தம்மா.

தென்மொழி வடமொழித் தேனமு துண்டதும்
சித்தம் சிலிர்க்குதம்மா—மிக
உன்னதக் கவிகளின் சன்னத வாக்கில் எம்
உள்ளம் தவழுதம்மா.

சாதி மதங்கிற பேதமில் லாதொரு
சமரஸங் காணுதம்மா.
ஆதவன கதிர்கள்போல் ஆன்ம ஒருமையில்
ஆருயிர் சேருதம்மா.

## 5. ஜய பாரத

தேவகாந்தாரி ஆதி தாளம்

**பல்லவி**

ஜயபாரத சுபபுண்ய பூமி—திவ்ய
ஜனனீ வந்தனம்—ஓம் சக்தி (ஜய)

**அனுபல்லவி**

இயல்வளம் செயல்வளம்
இனிய கலைவளம்
உயர்தவ வளங்களும
ஓங்கிய சுந்தரி (ஜய)

சரணங்கள்

கோடிகோடி அறிவாளர் வணங்கிடக்
கோடி கோடிக் கரம் கும்பிட்டு நின்றிடக்
கோடிகோடிக் குரல் பாடிப் பரவிட
குவலயம் போற்றிடு நவயுக கல்யாணி (ஜய)

கலைமகளே செல்வத் திருமகளே—வெள்ளி
மலைமகளே வீர மஹாகாளி ஜய (ஜய)

வாக்கினில் வித்தை
மனதினில் பக்தி
நெஞ்சத்தில் கோயில்கொள்
செஞ்சுடர் சக்தி
தோள்களில் பலமும் சுதந்தர நலமும்
நீளிசைக் கொடியும் ஆளிசை நாயகி (ஜய)

## 6. வந்தனம் இந்தியத்தாயே

சாமா ஆதி தாளம்

வந்தனம் இந்தியத் தாயே—இந்த
மாநில ரக்ஷகி நீயே
சுந்தரப் பொன்முகத் திருவே—ஆத்ம
சுதந்தர சக்தியின் உருவே! (வ)

கண்குளிர் கற்பக வனமே—இன்பக்
கனிரசம் பொழிந்திடும் வனமே
மண்குளிர் மங்களக் கதிரே—எங்கள்
மனங்குளிர் ஆனந்த மதியே! (வ)

கருணைக் குழலிசைக்கும் பண்ணே—இந்தக்
காசினி போற்றிடும் விண்ணே
மரண பயம் ஒழிக்கும் மருந்தே—கலை
மல்கிய வாழ்க்கையின் விருந்தே! ஜய (வ)

## 7. ஜயம் ஜயம்

கானடா — திச்ர ஏகம்

ஜயம் ஜயம் பெருகவே—எம்
ஜன்ம பூமி வாழ்கவே
துயர் கெடச் சுதந்தரச்
சுடர்நகை துலங்கவே! (ஜ)

நீர்வளம் நிலவளம்
நிகரிலாக் கலைவளம்
ஊர்வளம் உயிர்வளம்
உயர்வளங்கள் ஓங்கியே! (ஜ)

தீத்தணல் பறந்திடும்
தியாகவேள்விக் குண்டமே
சாத்விக பலத்திறற்
சகத்தை ஆளும் கண்டமே! (ஜ)

காசினியிற் புண்ணியங்கள்
கைகுவிக்கும் கோயிலே
ஆசியாவின் ஜோதியே—அத்
யாத்ம சக்தி நிலயமே (ஜ)

## 8. பாரத தேசம் என்றால்

கேதாரம் — ஆதி தாளம்

பாரத தேசம் என்றால்—இன்பப்
பரவசம் பெருகுமென் அறிவினிலே
வீரர்கள் காக்கு நிலம்—ஞான
வித்தகச் சித்தர்கள் விளங்கு நிலம்
தீரர்கள் ஆண்ட நிலம்—நல்ல
செல்வமும் கல்வியும் செழித்த நிலம்
பாரெல்லாம் வணங்கு நிலம்—தெய்வ
பக்தர்கள் பரமனைப் பரவு நிலம்

அருள்விளை யாடு நிலம்—உள்
அன்பினில் வளர்ந்திடும் அமுதநிலம்
இருளினை வென்ற நிலம்—ஞான
இரவியின் கதிர்களைப் பரவு நிலம்
பொருள் விளையாடு நிலம்—நல்ல
போகபோக்கிய மெல்லாம் பொருந்து நிலம்
தருமத்தைத் தாங்குநிலம்—எங்கள்
தாய்நிலம் வாழிய சத்தியம்போல்.

## 9. பாரீர் பாரத நாடு

தேஷ் — ஆதி தாளம்

**பா**ரீர் பாரத நாடு—இது
பாருக்குப் பேரின்ப வீடு
காரார் வான்மலர் சூடி—இதன்
கருணை மணிக்கொடி யாடும் (பாரீர்)

கற்பனைக் கினியநல் அழகு—கவி
களித்திடும் கனவுடன் பழகும்
சிற்பத்தின் அற்புதக் கோயில்—ஞானச்
சிகரத்தில் விளங்கிடுந் தாயில் (பாரீர்)

மந்திரப் புலவரின் வேதம்—வளர்
மலைநதி வளங்களின் கீதம்
யந்திரத் தொழில்களின் முழக்கம்—கலை
யின்பத்தில் வாழ்வதெம் வழக்கம் (பாரீர்)

கடலெல்லாம் கப்பலின் கூட்டம்—எங்கள்
கரையெல்லாம் செல்வத்தின் ஈட்டம்
உடலெல்லாம் வீரத்தின் ஓட்டம்—எங்கள்
உயிருக்குக் கடவுளே நாட்டம். (பாரீர்)

## 10. புண்ணியர் நாடே!

பாகேஸ்ரீ ஆதி தாளம்

புண்ணியர் நாடே, பூரணர் நாடே!
புகழ்மிகு பாரத நாடே!
விண்ணெளிர் நாடே, வித்தகர் நாடே!
விதவித வளந்தரு நாடே!

மாரதர் பலமும், வங்கரின் கலையும்,
மங்கலத் தமிழிசை யமுதும்,
சீரிய சிங்கரின் வீறுடன கூர்ச்சரர்
செல்வமும் மல்கிய நாடே!

புத்தரின் சாந்தப் புன்னகை யொளியும்,
பூரண யோகியர் கனலும்,
சித்தரின் அறிவும், பக்தரின் அன்பும்,
தீரரின் வீரமும் பொலியும்

எம்முளந் துடிக்கும் இன்னுயிர் நாடே!
எம்விழிக் கொளிதரு நாடே!
எம்மனம் நிம்மதி யெய்துநன் னாடே!
எங்களை யீன்றபொன் னாடே!

## 11. பாரத தேசம்

திலங் ரூபக தாளம்

பல்லவி

பாரத தேசம் எங்கள் பாரத தேசம்-வாழ்க (பாரத)

அனுபல்லவி

பூரணர் புகழுகின்ற புண்ணிய தேசம்
பொன்னு மணியும் புனித வளமும்
பொலியும் சுதேசம் (பாரத)

சரணங்கள்

அறமும் பொருளும் இன்ப வீடும்
அளிக்கும் பாரதம்

திறமை கொண்ட தீரர் போற்றும்
தெய்வ நாடிதே (பாரத)

மனிதர் தம்மை அமர ராக்க
வல்ல யோகமும்—
இனிய போகமும் பொருந்தும்
இன்ப நாடிதே. (பாரத)

உலக மெல்லாம் உள்ளம் ஒன்றி
ஒருகுல மாகி
நலமுடனே வாழ உண்மை
நாட்டும் நாடிதே.... (பாரத)

போட்டிபோர் பொறாமை யின்றிப்
பொதுநல உரிமை
காட்டி ஆத்ம நேய மூட்டும்
கருணை நாடிதே (பாரத)

## 12. வாழிய பாரதமே!

மால்கோஸ் தேசாதி தாளம்

**வா**ழிய பாரதமே—நாங்கள்
வாழ்திருத் தாய்நிலமே
ஆழியும் வானமும் பூமியும் போலவே
வாழி சுதேச நலம்—என்றும் (வாழிய)

பாரில் உயர்ந்த நிலம்—தங்கப்
பச்சை செழித்த நிலம்
பூரண யோகமும் போகமும் போற்றிடும்
புண்ணிய விண்ணகமே (வாழிய)

ஆனந்த வேதநிலம்—மலை
அருவிகள் பாடு நிலம்....
தேன்பொழி சோலையில் ஞானசங்கீர்த்தனம்
தென்றலைக் கொஞ்சு நிலம் (வாழிய)

வண்மை மிகுந்த நிலம்—அருள்
வாக்கு மலர்ந்த நிலம்
பெண்மையும் ஆண்மையும் கண்கருத் தொன்றிய
பேரின்பக் காதல் நிலம் (வாழிய)

கொள்ளக் கொள்ளக் குறையா—நிதி
கொட்டிக் குலுங்கு நிலம்;
ஒள்ளிய கல்வியும் தெள்ளிய கலைகளும்,
ஓங்கிவளர்ந்த நிலம் (வாழிய)

வெள்ளி மலைப்பரமனை—கடல்முனை
வீற்றிருக்கும் குமரி
வெள்ளம்போல் ஆத்தும சக்தி யளித்திட
வெற்றி முழங்கு நிலம்—நீடு (வாழிய)

## 13. சிவனிருக்கும்

*புன்னாகவராளி* *ஜம்பை தாளம்*

சிவனிருக்கும் இமயமலை எங்கள்வள நாடு
திருமாலின் ஏழுமலை எங்கள்வள நாடு
தவமுனிவர் பொதிகைமலை எங்கள்வள நாடு
சண்முகனார் பழநிமலை எங்கள்வள நாடு.

கங்கைவளர் பச்சை நிலம் எங்கள்வள நாடு
காவிரியின் பூம்பொழில்கள் எங்கள்வள நாடு
சிங்கம்வளர் மறவர் நிலம் எங்கள்வள நாடு
சீதேவி வாழுநிலம் எங்கள்வள நாடு.

முத்திறைக்கும் துறைமுகங்கள் எங்கள்வள நாடு
மூலசக்தி தவம்புரியும் எங்கள்வள நாடு
எத்திசையும் அருள்மணக்கும் எங்கள்வள நாடு
எல்லையில்லாப் பொருள குவியும்எங்கள்வள நாடு

சோகமில்லா முனிவர் நிலம் எங்கள்வள நாடு
தொழிலாளர் ஆளுநிலம் எங்கள்வள நாடு
வாகைமலி வீரர் நிலம் எங்கள்வள நாடு
வள்ளுவரின் வேதம்வளர் எங்கள்வள நாடு.

கொடைவளரும் செல்வர் நிலம் எங்கள்வள நாடு
கொலைமறுக்கும் சைவர் நிலம் எங்கள்வள நாடு
கடவுளுணர் கலைகுலுங்கும் எங்கள்வள நாடு
கற்பொளிரும் மாதர்நிலம் எங்கள்வள நாடு.

## 14. புண்ணிய பூமி

செஞ்சுருட்டி ஆதி தாளம்

புண்ணிய பூமிஎங்கள் பாரதமே
பூலோக சுவர்க்கமெங்கள் பாரதமே
எண்ணிய தெல்லா மளிக்கும் பாரதமே—எம்
இதயத் துடிப்பாகும் பாரதமே.

தருமமிகுங் குடியரசெங் தாய்நாடு
தமிழ்வாணி சாற்றிடுமெங் தாய்நாடு
கருமவீரர் தொண்டிசைக்கும் தாய்நாடு
கருணையிலே கனிந்தபழஞ் சோலையிதே.

வாழும்வகை வாழுமெங்கள் வளநாடு
வானரசை நாட்டுமெங்கள் வளநாடு
சூழுலகின் கோயிலெங்கள் வளநாடு.
சுதந்தரமாய்த் தலைநிமிர்ந்த தாய்நாடு.

முல்லைமணத் தென்றலிலே வான்மருவி
மூவர்ணக் கொடிபறக்கும் பாரதமே
நல்லநல்ல புலமைவளர் கலைவனமே
ஞானசக்தி நிலையமெங்கள் பாரதமே.

## 15. பொலிக! பொலிக!!

நுந்தலவராளி ஜம்பை தாளம்

பல்லவி

பொலிக பொலிக புதிய பாரதம்
போக யோக பூமி யாகப் (பொலிக)

அனுபல்லவி

கலையும் தொழிலும் கனக வளமும்
கனிந்த தேனும் பாலும் பொழியப்(பொலிக)

சரணம்

இதயம் பொங்கும் இளைய காதல்
இன்பம் ஓங்கியே
இருள் அடிமை அச்ச மின்றி
அருள் விளங்கவே
உதய சாந்த மங்களம் ஒளிர வாழ்விலே,
உலக மெல்லாம் கலக மின்றி
ஒன்றுபட்டு நன்று செய்யப் (பொலிக)

## 16. துந்துமி முழங்கிடுவோம்

சுருட்டி ஆதி தாளம்

பல்லவி

துந்துமி முழங்கிடுவோம்—ஓம்
ஜய ஜய பாரத சக்தி ஜயம் என்றே (துந்)

அனுபல்லவி

இந்தியர் கிறிஸ்துவர் இஸ்லாம் சகோதரர்
எல்லாரும் எல்லார்க்கும்
இனபுற வாழ்க என்றே (துந்)

சரணம்

தேசமே நம் உடல் தேசமே நம் உயிர்
தேசத் திருத்தொண்டே
தெய்வத் திருத்தொண்டாம்
நேசமும் பாசமும் வீரா வேசமும்
தேச நலம்; அது தியாகபலம் எனவே(துந்)

## 17. ஞானபூமி பாரதம்

மலயமாருதம் ரூபக தாளம்

ஞானபூமி பாரதம்
ஞாலத்திற்குத் தாயகம்
வானநாடு போன்றது
வண்மைதன்னிற் சான்றதே.
சமரசப் பொழிலிதே;
சத்தியத்தின் எழிலிதே
அமரவாழ்வு நல்கிடும்
அன்னையன்பு கொண்டதே.
புண்ணியங்கள் ஓங்கிடும்
போகயோக பூமியே
எண்ண எண்ண நெஞ்சிலே
இன்பமோங்கும் கோயிலே.
பாரதத்தில் வாழுவோம்
பாரதராய் வாழுவோம்
பாரதத்தின் சக்தியால்
பாருயர வாழுவோம்.

## 18. சுதந்தர ஹிந்துஸ்தானம்

சகானா ஆதி தாளம்

சுதந்தர ஹிந்துஸ் தானம்—அதில்
சூழுக மங்கள கானம்
இதந்தரும் புதுயுக வனமே—இங்கே
இருப்பவர் யாவரும் ஓரினமே.
சாதிமதநிற பேதம்—இல்லை
சத்தியமே எங்கள் வேதம்
ஆதி பகவனும் ஒன்றே—அவன்
அருளினில் யாவரும் வாழுக நன்றே.

உடல்பொருள் ஆவியைத் தருவோம்—எங்கள்
உத்தம தேசமின் புறவே
கடல் கதிர் மழை நதி எனவே—இங்கே
கடமையைச் செய்வது நலமே.

ஆணுடன் பெண்ணும் சமானம்—இந்த
அன்பினில் உதித்தது ஞானம்
காணுல காலயந் தன்னில்—இவர்
கண்ணுடன் கதிர்மணி போல்வார்

அச்சமுந் துச்சமும் இன்றி—இனி
அடிமை விலங்குகளும் இன்றி
உச்ச உரிமையிலே வாழ்வோம்—இந்த
உலகுக்கு நல்லதைச் சூழ்வோம்.

## 19. இந்திய நாடு

கரகரப்பிரியா — ஆதி தாளம்

இந்திய நாடெங்கள் அரசே—இசை
ஏறிடும் கடலதன் முரசே.
விந்தியம் கைலையெம் மலையே—அவை
வெற்றி மகுடத்தின் சிலையே.

சிந்து கங்கை காவேரி—வளஞ்
செழித்திடப் பாய்ந்திடும் ஆறே
சுந்தர இயற்கையெம் வனமே—அதிற்
சொக்கிடும் கவிகளின் மனமே.

கீதையும் குறளும் எம் வேதம்—உள்ளக்
கிளர்ச்சிகளே சங்க நாதம்
தீதையும் சூதையும் ஒழித்தே—நன்மை
செய்தவமே எங்கள் போதம்.

கம்பரும் வ்யாசரும் கவிகள்—அருட்
கண்ணனும் அப்பரும் குருமார்
திண்புறு திலகர் மஹாத்மா—வீர
சிவாஜியெம் சீர்பெறும் துணைவர்.

காலத்தை வென்றதெம் கலையே—அருட்
காட்சியை வென்றதெம் நிலையே
ஞாலத்தை வென்றதெம் எழிலே—எங்கள்
நாடெல்லாம் பேரின்பப் பொழிலே.

## 20. நாமே பாரத நாடு

சிந்துபைரவி ஆதி தாளம்

**பல்லவி**

நாமே பாரத நாடு
நம் வாழ்வதன் பண்பாடு (நாமே)

**அநுபல்லவி**

ஹேமகூடமே மகுடம்
இமயசிவசக்தி முகமே
நேமநிட்டைவளர் முனிவர்—கண்ட
நிமல ஞானமெங்கள் உள்ளம்.
(நாமே)

**சரணம்**

கங்கை சிந்துநீள் கரங்கள்
காவிரி விமலை ஆரங்கள்
துங்கவிந்தியம் இடையே—இரு
தொடர்களும் எங்கள் தொடையே

தென்முனை பாதம்
சிஙகளம் போது
பொனமணி யணிகள்
பொஙகிடும் வளமே........

முக்கடல் முரசம்
முழங்கியெம் புகழை
தக்கட தகவெனத்
தாண்டவ மாடும் (நாமே)

## 21. ஜயமுரசு

மோகனம் — ஜம்ப தாளம்

### பல்லவி

ஜயமுரசு கொட்டடா—இன்பச்
சிகரஜோதி எட்டடா.
துயரைவீழ்த்தித் துணிவை வாழ்த்திச்
சுதந்தரக் கொடி உயர்த்தி (ஜய)

### அனுபல்லவி

பகைத்திரள் அனைத்தையும்
தகர்த்தெறிந்து முன்சென்றே
சகத்திலே சனமார்க்க சங்க
சாதுக்கள் செழிக்கவே (ஜய)

### சரணம்

பண்பிலாத வம்பரின்
பரிகசம் அடங்கவே
கண்ணிலா வெறியரின்
கடுஞ்சினம் ஒடுங்கவே (ஜய)

குண்டரின் கொழுப்பினைக்
குமைத்தமைதி நாட்டினோம்.
பண்டைவீர சக்தியுண்டு
பாண்டியர் மரபுநாம். (ஜய)

துய்க்க வந்த நல்லமுதைத்
துஷ்டநாய் பறிக்கவோ
கைக்குவந்த கண்மணியைக்
கள்ளர்கை கொடுப்பதோ ? (ஜய)

உரிமை பெற்ற பாரதம்
உலகுபோற்ற நிலவுமே
பிரிவிலாத ஒற்றுமை
பெருக வென்று கொட்டடா (ஜய).

## 22. பாரத கண ராஜ்யம் !

பிலகரி — ரூபக தாளம்

**பல்லவி**

பாரதகண ராஜ்யம்—ஜய
பாரதகண ராஜ்யம்—வாழ்கவே

**அனுபல்லவி**

வீர தீர சூர மோங்கி
வேத வழியில் வெற்றி ஓங்கி (பாரத)

**சரணங்கள்**

பஞ்ச மின்றி நோய்க ளின்றி
பயமில்லாத சுதந்தரத்தில்
வஞ்சப் பகைவர் தொல்லை யின்றி,
வறுமை மடமை யடிமை யின்றி (பாரத)

பிரிவினைசெய் பீடையினறி,
பேய்மத வெறிக ளின்றி
உரிமை யோங்கி உள்ள மோங்கி
உண்மை யோங்கி வண்மை யோங்கி (பாரத)

கண்ணன் கீதை, புத்தர் போதம்
காந்தி நீதிதர்மம் போற்றி
மண்ணுலகில் விண்ணரசை
மகிழநாட்டி மாண்பு காட்டி (பாரத)

என்றும் அன்பு, என்றும் இன்பம்,
என்றும் கர்ம வீர வெற்றி,
என்றும் ஒன்று பட்ட சக்தி
இலகத் தூய இரவிபோல (பாரத)

## 23. நமது குடியரசு

அடாணா — ஆதி தாளம்

நமது குடியரசு—சங்க
நாத முழங்கிப் பல்லாண்டிசைப்போம் !

இமய சிகரத்திலே—கொடி
ஏற்றி முரசுடன் போற்றி செய்வோம் (நம)

கண்ணினும் அரியதம்மா—தியாகக்
கனலினில் புடம்வைத்த கனக மம்மா
விண்ணினும் பெரியதம்மா—ஜய
வீரசுதந்தர பாரதசக்தி—வாழ்க (நம)

பாடுவோம் பல்லாண்டு—எங்கள்
பாரதசக்தி ஜனநாயகம்
நீடூழி வாழ்கவென்றே—ஆத்ம
நேயர்கள் பொன்மலர் தூவிடுவோம்! (நம)

பஞ்சம் பிணிகளின்றி—பாழும்
பயமின்றி வஞ்சப் பகைவரின்றி,
நெஞ்சத்தில் ஒன்றுபட்டே—இங்கே
நித்தியம் வாழுவோம் சத்தியத்தால் (நம)

## 24. சொக்கும் சுடர் நகை

எதுகுலகாம்போதி ஜம்பை தாளம்

சொக்கும் சுடர்நகை வானம்போல்—வாழ்க
சுதந்தர பாரத சக்தியே
மக்கள் பலகோடி போற்றவே—சுப
மங்கள கானம் முழங்கவே ......
சக்கரம் ஓங்கும் ஜயக்கொடி —சாந்த
மாருதத்தில் விளையாடவே—எட்டுத்
திக்கிலும் பேரிகை கொட்டியே—எங்கள்
தேசப் புகழைக் கொண்டாடவே (சொ)

நாம்இனி ஓர்குலம் ஓர் இனம்—இந்த
நாடு பொதுநல வீடென்றே
சேமமுறச் சொல்லி பாரதர்—தொண்டு
செய்து முன்னேறி மகிழவே

பூமழை கொட்ட விமானங்கள்—கப்பல்
 பொன்மணி கொண்டு குவிக்கவே
தீமை நலிய நலஞ்செய்யும்—வீர
 தீரர் படைநடை போடவே (சொ)

வஞ்சப் பகைக்குலம் அஞ்சவே—பொது
 வாழ்வினிலே இன்பம் கொஞ்சவே
சஞ்சலச் சாதி ஒழியவே—என்றும்
 சத்திய தர்மம் ஒளிரவே
வெஞ்சமர் இல்லாது போகவே—மன
 வேகத்திலே அறிவேறவே—உயிர்
நெஞ்சத்தில் ஆத்மக் கனலுடன்—தெய்வ
 நீதி நிலவித் துலங்கவே (சொ)

கடலுக்கு நீரினைப் போலவே—இளங்
 கதிருக்குப் புன்னகை போலவே
உடலுக்கு நல்லுயிர் போலவே—இந்த
 உலகுக்குச் சுடரொளி யாகவே
இடர்களைச் சயமுறத் தாண்டியே—மாந்தர்
 இதயத்தில் அருளினைத் தூண்டியே
நடமிடுங் கடவுளின் கருணையால்—எந்
 நாளுமெம் தாய்நிலம் வாழ்கவே! (சொ)

## 25. துள்ளி விளையாடும்

*சங்கராபரணம்* *ரூபக தாளம்*

துள்ளி விளையாடும்—எங்கள்
 சுதந்தரக் குழந்தை
உள்ளங் குளிர்ந்திடவே—பரமா
 ஊக்கம் அளித்திடுவாய்.

வானச் சுடரமுதே—நாங்கள்
 வாழும் குடியரசில்
தேனமுதம் பெருக—பசி
 தீரப் பொழிந்தருளாய்.

கள்ளர் பயமினறிப்—படுகொலை
காரர் பயமின்றி
உள்ளபடி யுழைப்பார்—நலம்
ஓங்கத் துணைபுரிவாய்.

மனப் புரட்சியின்றி—பசி
வாட்டும் புரட்சியின்றி
இனப் புரட்சியின்றி—மக்கள்
இனபுறும் அன்பருள்வாய்.

தீயரை வீழ்த்திடவே—வீரத்
தெம்புமிகத் தருவாய்
நேயரைக் காத்திடுவாய்—எங்கும்
நிறைந்த நின்மலனே.

## 26. துள்ளித் துள்ளி வா வா!

சுபோஷிணி — திஸ்ர ஏக தாளம்

துள்ளித் துள்ளி வா வா
தோள் புடைத்து வா வா
வெள்ளம் போல வா வா
வெற்றி யுண்டு வீரனே!
நள்ளிரவைப் பிளந்திடும்
நாத மின்னல் போலவே
கள்ளப் பகையைக் கட்டழிக்கக்
கந்தன் சக்தி வேலைக்கொண்டு
துள்ளித் துள்ளி வா வா
துணிந்த வீரச் சிங்கமே! (துள்ளி)

எல்லைப் புறத்தை வளைத்திடும்
இகல்பின்னோட வா வா!
கொல்லைப் புறத்தைச் சுரண்டிடும்
கொடியர் நடுங்க வா வா!

கல்லைச் சாடும் வீரனே
    கனல் பறக்க வா வா!
நல்லறத்தைக் காத்திட
    நாசகரைக் கவிழ்த்திடத் (துள்ளி)

அறிவினை வளர்த்திட-நல்
    ஆண்மையை வளர்த்திடப்
பிரிவினை செய் வஞ்சமான
    பீடையை ஒழித்திட
உரிமை தன்னை நாட்டிட,
    ஒற்றுமையைப் போற்றிடப்
பெரிய கனவு செயல் பெறப்
    பிரியமான கலையுடன் (துள்ளி)

நமது நாடு நம்மிடம்
    நமது சக்தி நம்மிடம்
நமது கல்வி தொழிலெலாம்
    நமது பண்பில் வளரவே
அமைதியான தமிழகம்
    அருள் சிறந்து வாழவே
குமுதமிட்டு வள்ளுவர்
    குறளையோதி வா வா (துள்ளி)

## 27. முன் செல்!

திலங் ஆதி தாளம்

முன்செல் முன்செல் மனிதா
    முன்செல் உலகத் துடனே
பொன்செய் பொன்செய் பொழுதை—உன்
    போதை வீணாக்காதே (முன்)

சுதியும் சுரமும் லயமும்—
    தொடரும் இசையைப்போலே
நதியின் வெள்ளம் போல—எந்
    நாளும் புதுமை பொலிய (முன்)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல வரிசை எண்: 1534
நன்கொடை எண்: 1534
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

நாடும் நாடும் கூட,
நாமும் பிறரும் குலவ
வீடும் வீடும் விரவ—இங்கே
விண்ணின்பங்கள் பரவ (முன்)

ஒன்றே நிலமும் குலமும்
ஒன்றே இறைவன் அருளும்
ஒன்றே வானும் வளியும்—நாம்
ஒன்றே என்றே நன்றே (முன்)

## 28. சக்தியன்னை

மாண்டு திஸ்ர ஏக தாளம்

சக்தி யன்னை பக்தருக்குச்
சஞ்சலங்கள் ஏதடா?
சாவு மில்லை நோவு மில்லை
சங்கடமும் இல்லையே.

சுத்தமான சீலருக்குத்
துன்பமென்ப தேதடா....?
தொல்லையில்லை அச்சமில்லை
சுதந்தர வனத்திலே.

ஒத்து வாழும் தொண்டருக்கு
உலக வாழ்க்கை இன்பமே
ஒருமை கொண்ட யோகியர்க்கு
உட்லுங் கோயி லாகுமே.

நித்தி யத்தைக் கண்டவர்க்கு
நீசக் கூற்றின் பாசமேன்?
நிமலமான அமர வாழ்வை
நீடு வாழ நாடுவோம்.

## 29. கொஞ்சும் குழந்தையின் உள்ளம்

பேஹாக் ஆதி தாளம்

கொஞ்சும் குழந்தையின் உள்ளம்—மழை
கொட்டும் கருமுகில் வெள்ளம்
செஞ்சுடர் வீசும் இரவி—போலச்
செகத்தினில் வாழ்வோம் விரவி,

பூமிநமக்கு நகரம்—அதிற்
பொருந்திய நாடுகள் வீதி.
சாமியும் அந்தர யாமி—மனச்
சாட்சி நமக்கொரு சட்டம்

வானொலி கப்பல் விமானம்—ரயில்
வண்டி மின்சாரப் பொறிகள்
மாநில வாழ்வை இணைக்கும்—புது'
வளம்பெறு நலம்பல செய்வோம்.

கீதையும் பைபிளும் கற்போம்—
கிழக்கையும் மேற்கையும் சேர்ப்போம்
சாதிமதங்கள் இனியேன்—நாம்
சத்திய சமரஸக் குடும்பம்.

ஏழை பணக்காரன் இல்லை—நாம்
எல்லாரும் பாட்டாளிமக்கள்
வாழையடி வாழையாக—அதி
மானிடராகவே வாழ்வோம்.

உண்ண உடுக்க இருக்க—அறி
வோங்கத் துயரிடர் நீங்க
எண்ணிய நன்மை யியற்ற—நாம்
எல்லாரும் வல்லவ ராவோம்.

## 30. நல்ல குறி சொல்லுகிறேன்

*கீரவாணி* *ஜம்பை தாளம்*

நல்லகுறி சொல்லுகிறேன வல்லரசீ கேளாய்
வெல்லுவது சத்தியமே விளங்குவதும் அறமே.
தேசக் குறத்தி நாலுந் தெரிந்துரைக்குங் குறத்தி
நேசக் குறத்தி இந்த நிலவுலகக் குறத்தி.
அணுகுண்டர் சூழ்ச்சிகளை அறிந்து வந்த குறத்தி
அணுவளவும் அஞ்சாமல் அறிவுசொல்லும் குறத்தி
கலகமில்லை குமுறுகின்ற உலகமில்லை கண்டேன்
உலகமில்லை கலங்குகின்ற உணவுமில்லை கண்டேன்.
கொடிபறக்கும் குடியரசிற் பிடியரிசிப் பஞ்சம்
பிடியரிசிப் பஞ்சத்தினல் கொடியபெரும் புரட்சி.
வஞ்சமின்றிப் பாடுபட்டால் வளமையுண்டு நாட்டில்
பஞ்சமில்லை பாபமில்லை பகையுமில்லை வீட்டில்.
காலத்திற் கேற்றபடி காரியங்கள் செய்தால்
ஞாலத்திற் கேற்றபடி நன்மை பெறலாமே.
அஞ்சாத நெஞ்சினிலே அனபுறுதி கொண்டால்
வெஞ்சமர்செய் அரக்கரையும் வெல்லவழி யுண்டு.
துயர்மிகுந்த இருளினிலும் தூண்டுசுடர் உண்டு,
புயல்மிகுந்த கடலினிலும் புகலளிக்கும் தெய்வம்.
ஒற்றுமையாய் ஓரினமாய் ஒருமையுடன் வாழ்ந்தால்,
வெற்றிதரும் திருக்களெல்லாம் சுற்றிவரும் நாட்டில்.

## 31. சுத்த சக்தி

*மாண்டு* *ஜம்பை தாளம்*

சுத்தசக்தி சக்தி யென்று சொல்லுவோம்
சூரராகிப் பார்முழுதும் வெல்லுவோம்
எத்திசையும் இன்ப மோங்கக் காணுவோம்
ஏந்தநாளும் இசைமகுடம் பூணுவோம்,

வீரராமன் கண்ணன் விஜயன் போலவே
வீமன் அனுமன் வளவன் சிவஜி போலவே
பாரத பராசக்திக் கொடியினைப்
பாதுகாப்போம் பணிய இந்த ஞாலமே.

ஆவியில் அருட்கனல் வளருமே
அச்சப்பேய் அழிந்தொழிந்து போகுமே
சீவனிற் சிவமணம் கமழுமே—நல்ல
செல்வமும் திருக்களும் பெருகுமே.

ஆழிபோல் அறிவுவெள்ளம் பொங்குமே
அன்பறந் துலங்கி யெங்கு மோங்குமே
ஊழையும் அடக்கியாள லாகுமே—என்றும்
உள்ளத் தானைக் காட்டுமிந்தத் தேகமே.

## 32. வெள்ளி வெளுத்தது!

செஞ்சுருட்டி ஆதி

வெள்ளி வெளுத்த தென்றே ஊது சங்கே
விடுதலை வந்ததென்றே ஊது சங்கே
உள்ளம் களித்திடவே ஊது சங்கே
உண்மைக்கு வெற்றி யென்றே ஊது சங்கே.

வானக் குடைநிழலில் வாழுயிரெல்லாம்
மங்கல வாழ்வுபெற ஊது சங்கே
ஈன மனமயக்க வேற்றுமை யெல்லாம்
இன்றுடன் ஒழிந்த வென்றே ஊது சங்கே.

சித்த உறுதிகொண்டு சேமமுறவே
தேசமெல்லாம் ஆத்மவிசு வாசமுறவே
சக்தி பிறந்ததென்றே ஊது சங்கே
சண்டை ஒழிந்ததென்றே ஊது சங்கே.

கொடுமை ஒழிய உயிர்க் கொலை ஒழியக்
கொள்ளை ஒழியப்பகைச் சள்ளை ஒழிய
மடமை வறுமையிருள் மறைந்தொழிய
வந்ததருள் ஆட்சியென்றே ஊது சங்கே.

வந்தேமாதரம் என்றே ஊது சங்கே
வாழ்க ஜய பாரதமென் றூது சங்கே
துந்துபி முழங்கிடவே சந்தமுடனே
சுத்தசக்தி சக்தி யென்றே ஊது சங்கே.

## 33. பள்ளுக் கொட்டுவோம்

வசந்தா திஸ்ரஏக தாளம்

பல்லவி

பள்ளுக் கொட்டுவோம்—வசந்தப்
பள்ளுக் கொட்டுவோம்.

அனுபல்லவி

கள்ளை யுண்ட வண்டுபோல
கனிகளுண்ட பறவை போல
எள்ளை யுண்ட எறும்பு போல
இதயமின்பம் எய்திக் களிக்கப். (பள்ளு)

சரணம்

வசந்த வனத்தில் வட்டமிட்டு
வாய்ந்த காதல் வண்ணம் பாடி
அசைந்து தவழும் அன்னம் போலும்
ஆடும் வேத அருவி போலும் (பள்ளு)

யாழும் குழலும் முழவும் பிடிலும்
ஏழிசைக் குரலும் போல
வாழும் வகையைச் சூழ் நாட்டி
வகுப்புவாதப் பேயை ஓட்டிப் (பள்ளு)

ஏக்கமில்லை தூக்க மில்லை
இன்பமன்றித் துன்பமில்லை
நீக்கமில்லை என்று மிருக்கும்
நிலையைச் சொல்லி அலைகடல்போல் (பள்ளு)

## 34. அகரவுயிரை

காணடா ஆதி

அகரவுயிரைப் போலே
ஆத்ம சக்தியாலே
செகவுயிரே நாமாய்—நல்ல
சேவை செய்ய வாரீர்!

சிகரஜோதி யான
ஜீவபதியை நினைத்தே
சுகமருளும் அனபால்—ஒரு
சுத்தசங்க மாவோம்.

பகைபொறாமை தீமை—இன்றிப்
பசிக்கொடுமையின்றி
மிகை குறைகளின்றி—அன்பு
மேவிச் சேவை செய்வோம்.

## 35. உலகினுக்கே

மணிரங்கு ஆதி

பல்லவி

உலகினுக்கே நல்ல நாயகமே—எங்கள்
உன்னத பாரதத் தாயகமே (உல)

அனுபல்லவி

புலமுயர் பசுந்திருப் பொன்னகமே—எங்கள்
புண்ணிய பூமியே விண்ணகமே (உல)

சரணம்

அறத்தினைத் தாங்கிடும் அமுதநிலம்—இதன்
ஆருயிர் மக்களோ அமரர்குலம்
புறத்திலும் அகத்திலும் பூரணமே—இதைப்
போற்றிடலே ஜீவோத் தாரணமே (உல)

## 36. தங்க வளங்கள்

தீர சங்கராபரணம் திஸ்ரஏக தாளம்

தங்கவளங்கள் பொங்கிப் பொலியும்
எங்கள் பாரதம்
எங்கள் புண்ய பூமி—உலகின்
இன்பச் சோலையே—

புனிதசக்திப் புலவர் போற்றும்
இனிய பாரதம்
மனிதரை அமரர் ஆக்க
வல்ல பாரதம்—வாழ்க (தங்க)

கலகமற்ற கருணை ஒளியைக்
காட்டும் பாரதம்
உலகமெல்லாம் போற்றி செய்யும்
உண்மை விண்ணகம்—வாழ்க (தங்க)

குண்டுவீசிக் கொன்று குவிக்கும்
கொடிய உலகிலே—என்றும்
சண்டையற்ற சாந்தவாழ்வைக்
கண்ட இந்தியா—வாழ்க (தங்க)

## 37. அருணைச் சிலை

அருணைச்சிலை போல் அழகி
அமுதநிலா பொழியும்

கருணையுள்ள புன்னகையாள்
கனவினிலே வந்தாள்.

அகமலரின் ஆத்மஒளி
முகமலரில் வீசச்
சகவடிவில் விளையாடும்
சக்தியெதிர் வந்தாள்.

மெல்லியபூ மணக்காற்றில்
வீணையிசை முரலப்
பல்லாண்டு பாடியிளம்
பறவையினம் போற்ற.

வட்டவுல குயிர்களைத்தன்
மக்களெனக்கொண்டு
தட்டாமாலை சுற்றுகின்ருள்
தாயமுதத் தேவி.

நவயுகமும் நவவுருவும்
நவசக்திப் பொலிவும்
சிவமயமாம் விண்ணரசும்
செழிப்பதவள் செயலே.

## 38. ஒன்றே உயிரும்

காபி ஆதி

ஒன்றே உயிரும் உலகும்—எங்கும்
உள்ளப் பொருளும் ஒன்றே
நன்றே நெஞ்சில் உணர்வோம்—நம்
நாடும் வீடும் நலமாம்.

வானக் குடையின் கீழே—வளர்
மாந்தர் ஆன்ம நேயர்.

ஆனந்தத் தேன் கூடாம்—உடல்
அனபுச் சுடரின் வீடாம்.

அமுதம் அமுதம் என்போம்—நம்
அகமே அமுதக் குடமாம்
நமனும் அணுகான் பூமேல்
நம்மை நாம் அறிவோமேல்.

அழகின் சுவையை நினைவோம்—உள்
அழகே கவியின் கனவாம்
பழகும் உயிரும் உடலும்—கலைப்
பண்பும் பண்ணும் போலாம்.

இன்பம் இன்பம் என்போம்—நம்
இதயப் பொருளை யணைவோம்
அன்பில் ஒருமை காண்போம்—புவி
யனைத்தும் ஆடல் என்போம்.

## 39. இதுவே பாரத தர்மம்

நாட்டக்குறிஞ்சி ஆதி

இதுவே பாரத தருமம்—இதை
என்றும் பயில்வோம் உலகீர்
பொதுவே உலகும் உயிரும்—பரம்
பொருளும் அருளும் பொதுவே.

உதயக் கதிரோன் போலே—நம்
உடலுக் குயிராம் அதுவே
அதனை இதயம் அறிவார்—இங்கே
அமரத் தன்மை பெறுவார்.

எல்லாரும் எல்லாரும்—இங்கே
இன்புற் றிடவே வாழ்வோம்.

நல்லன நாடிச் செய்வோம்—பர
ஞானச் சிகரம் சேர்வோம்.

கட்டும் கவலைப் புயலும்—எரி
கனல்முன் இலவம் பஞ்சாம்
ஒட்டுந் துயரும் ஒழியும்—என்றும்
உள்ளன் பமுதம் பொழியும்.

காந்தங் கூடும் முனைபோல்—உயிர்
காதல் ஒளியைக் கலந்தால்
சாந்தம் சாந்தம் சூழும்—ஆத்ம
சக்திச் சுடர்நம் வாழ்வே.

## 40. தேவி பாரதி

கமாஸ் ரூபகம்

தேவி சக்தி பாரதியின்
செல்வர் நாங்கள் யாவரும்—எங்கள்
ஆவியாக்கை செய்கை யெலாம்
அவள்பணிக்கென் றீந்தனம்.

அன்னையென்ற போதிலுள்ளம்
அன்பு வெள்ளம் பொங்கிடும்.
உன்னதப் பரவசத்தில்
ஓடியாடும் எம்முயிர்.

அமுதமான புன்னகை
யழகு பூத்த சுந்தரி
குமுதமான செங்கண்ணாள்
குளிர்ந்த பார்வை கொண்டவள்

தங்கமான மேனியாள்
தழைத்தபச்சை அணியினாள்

சிங்கம் போல மைந்தருக்குத்
திண்மை நல்கும் தீயினுள்.

அரக்கரின் கொழுப்பினை
அடக்கிடும் பயங்கரி
மறக்கருணை கொண்டசண்டி
மங்கலத் திருமகள்

பற்றிநிற்கும் பக்தருக்குப்
பகைநடுங்கும் சக்தியும்
வெற்றி அருளும் மாலையும்
விஜயசக்தி வாழ்கவே!

## 41. சக்கரக் கண்ணனே வா!

பைரவி ஆதி

சக்கரக் கண்ணனே வா வா—எங்கள்
சங்கடந் தீர் துணை தாதா.
மிக்கவும் வருந்தி மெலிந்தனம் ஐயா
மேதினி காக்கப் போதிது துய்யா (சக்)

ரூபகம்

பாரதப் போரினிலே—வீரப்
பார்த்திபன் தேரினிலே
காரினில் மின்னலென—அமர்ந்தே
கர்ஜித்த கீதையைத்தா (சக்)

வஞ்ச நராசுரனை—வதைத்த
வலிய கரங்களினால்
பஞ்சப் பகாசுரனை—ஒழித்தே
பால்வளம் பொங்கவருள் (சக்)

பத்தினி பாஞ்சாலி—மானம்
பாதுகாத்த ஹரியே

கைத்தொழிலை வளர்த்தே—மானங்
காக்கஓர் ஊக்கமருள் (சக்)

அரவுயர் கொடியோன்—கொடுமையை
அழித்த காவலனே
அரசியற் சூதர்—மூட்டும்
அதர்மப் போரொழிப்பாய் (சக்)

சாதுக்களை வருத்தும்—அரக்கர்
சகத்தினில் வலுத்தார்
மாதுக்கம் போக்கியருள்—உலகுக்கு
மங்கள நாயகியே (சக்)

## 42. தொண்டினிலே இன்பம்

காம்போதி ரூபகம்

தொண்டினிலே இன்பமுண்டு
தொழிலேநம் சக்தி
வண்டெனவே பாடுபட்டால்
வறுமையினி இல்லை.

காரிசையும் ஏரிசையும்
கப்பலோட்டி யிசையும்
தேரிசையும் தறியிசையும்
தேசகீத மாகும்.

ஆழியிசை மேகராக
மாகிமழை சொரியும்
ஏழிசையும் இசைப்பயனும்
யந்திரத்தில் அடைவோம்.

வாடையிலே பரிதவிக்கும்
வறியர்மனம் மகிழ

ஆடையுணவு தந்தாலே
அன்பிசைகள் முழங்கும்.

விவகாரப் பத்திரிகை
விளம்பரம் செய்தென்ன?
உபகாரம் செய்பவர்க்கே
உண்மையான புகழாம்.

தேசவுயிர் துடிக்குதையா
தெருவினிலே பாராய்
நேசவுயிர் துடிக்குதையா
நெஞ்சு துடிக்குதையா.

## 43. எத்தனை காலமாய்

பிலகரி சாபு

எத்தனை காலமாய்
ஏங்கித் தவிக்கின்றோம்—சக்தியன்னே
இத்தின மேனுமுன்
சித்தம் இரங்காதோ—சக்தியன்னே.

வீட்டைப் பறிகொடுத்தே
வீதியில் நிற்கின்றோம்—சக்தியன்னே
பூட்டிய சிறையினில்
புண்பட்டுத் தவிக்கின்றோம்—சக்தியன்னே

சொந்த நிலமிருந்தும்
சோற்றுக்குத் தவிக்கின்றோம்—சக்தியன்னே
பந்த விலங்குகளின்
பளுவினித் தாங்கிலோம்—சக்தியன்னே.

சூது பொறாமையின்
சூழ்ச்சி ஒழியாதோ—சக்தியன்னே
சாது ஜனங்களின்
சத்தியம் பலியாதோ—சக்தியன்னே.

அன்னிய மாயத்தின்
ஆணவம் அழியவே—சக்தியன்னே
உன்னருள் ஆற்றலே
உள்ளத்திற் பொழிகுவாய்—சக்தியன்னே.

## 44. ஏழைகள் யார்?

நாதநாமக்கிரியை ஆதி

ஏழைகள் யாருலகில்?—பணக்கார
எத்தர்கள் யாரினிமேல்
கோழைகள் யாருலகில்—கொடுமைசெய்
கொற்றவர் யாரினிமேல்?

கஞ்சிக்குப் பஞ்சமில்லே—தொழில்செய்யக்
கையுண்டு செய்யும் உண்டு
பஞ்சக் கொடுமையில்லே—எல்லாரும்
பாடுபட்டுப் பிழைப்போம்.

துன்பப்பழஞ் செருக்கை—இன்று
தொக்கி மிதித்தெறிந்தோம்
அன்புக்குத் தொண்டு செய்வோம்—இனி
ஆண்டை—அடிமையில்லே.

வானக் குடைநிழலில்—ஒன்று பட்டு
வாழும் உரிமை கொண்டோம்
ஞானக் கடவுளுண்டு—ஆன்மநேய
நல்ல சன் மார்க்கமுண்டு—

## 45. சக்கரம் சுழற்றிடுவோம்

புன்னகவராளி ஆதி

சக்கரம் சுழற்றிடுவோம்—செல்வச்
சக்கரம் சுழற்றிடுவோம் ........

சொக்குது ஓம் எனவே—அதன்
சுருதியைக் கேளுங்கடீ. (சக்)

கொல்லையில் பருத்தி யுண்டு—அதை
கொட்டிட மணையு முண்டு
மெல்லிய நூலிழுத்தே—நெய்ய
விதவிதக் கருவியுண்டு. (சக்)

கூழுக்குப் பஞ்ச மில்லை—நல்ல
கோடிக்குப் பஞ்ச மில்லை
வாழ்வுக்குப் பஞ்ச மில்லை—நூற்க
வாருங்கள் குமரிகளா. (சக்)

சந்தியில் வம்படிப்பீர்—வீண்
சரடுகள் திரித்திடுவீர்
குந்தியிருந்து நூற்பீர்—உங்கள்
குடியெல்லாம் வாழும்மா. (சக்)

ஈனத்தை நீக்கிடுமே—நம்போல்
எளியரைப் போற்றிடுமே
மானத்தைக் காத்திடுமே—இந்த
மங்கல ராட்டினமே. (சக்)

## 46. ஹரிஜன சேவை

காபி ஆதி

ஹரிஜன சேவை செய்வோம்—நாட்டில்
அன்பு நிறைந்திடவே
சரிசம்மானவரே—அவர்நம்
சமரஸ சோதரரே

ஊருக்குத் தொண்டுசெய்வார்—வயல்
உழுது நட்டே விளைப்பார்
வேருக்கு நீர்விடுவார்—உடல்
வேர்க்க உழைத்திடுவார்

தீண்டப்படாதவரோ—இந்த
தேசத் திருத் தொண்டர்
வேண்டப்படாதவரோ—இந்த
வீரத் தமிழர் குலம்

இந்திய நாட்டினிலே—இனி
எல்லாரும் ஓர் குலமே
சந்ததி சந்ததியாய்—வாழும்
சன்மார்க்க நேயர்களே!

## 47. தைரியமா யிருங்கள்

ஹம்ஸானந்தி ஆதி

தைரிய மாயிருங்கள்—என்றும்
சத்தியம் வென்றிடுமே
வைரமும் பகையுமின்றி—நாம்
மன்னுயிர்த் தொண்டு செய்வோம்.

நோயெனப் படருகின்ற—அச்சத்தை
நூறி யெறிந்திடுவோம்
தாயின் கொடி பிடிப்போம்—என்றும்
சத்திய வீரத்தினல்

தியாகக்கனல் குளிப்போம்—கடுஞ்
சிறையிலும் தவம்புரிவோம்
தேகத்தைத் தந்திடுவோம்—நம்
தேச விடுதலைக்கே.

விலையடிமைத் துயர்செய்—கொடும்
விலங்கினை முறித்தெறிவோம்.
வலைகளையறுத்தெறிவோம்—மன
வாட்டம் விட் டெழுந்திருப்போம்.

## 48. கங்காணி பேச்சை நம்பி

புன்னாகவராளி — ரூபகம்

கங்காணி பேச்சை நம்பி—ஐயா
கஞ்சி கிடைத்திடும் பஞ்சமில்லை—என்றே
இங்கே உழைக்கவந்தோம்—ஐயா
ஏமாந்து மிக்க இழிவுபட்டோம்.

நேட்டால் வயலினிலே—அந்த
நீண்ட கனிமரச் சோலையிலே
காட்டிலே வேலை செய்தோம்—உடல்
கடுக்கத் துரை அடிக்க.

தங்கச் சுரங்கத்திலே—வைரந்
தழைக்கும் கனிகளிலே—
பங்கப் பட்டே யுழைத்தோம்—இந்தப்
பாழும் வயிற்றினுக்கே

பசியுந் தணியவில்லை—நிதம்
பாடுபட்டும் நிலை கேடுகெட்டோம்
கசையடி பட்டுப்பட்டே—நிதம்
கண்ணீரில் வாடிக் கரைந்துவிட்டோம்.

புழுதி மேவும் பொட்டலிலே—நாங்கள்
பூவுங்கனியும் பொலிய வைத்தோம்.
கழுதைநாய் என்று வைவார்—ஐயா
கறுப்புத் தோலைக் கண்டதுமே—இங்கே

தொழுதுண்டு வாழ்வதினும்—இந்தத்
தொல்லைகளுக் கெல்லாம் தாழ்வதினும்,
உழுதுண்டு வீட்டுடனே—நம்
ஊரினில் வாழலாம் சீருடனே.

## 49. உரிமை யுண்டு

மாண்டு ரூபகம்

உரிமை யுண்டு — உரிமை யுண்டு
உலகிலுள்ள யாவர்க்கும்
பிரிவிலாது துயரிலாது
பெருமையாக வாழவே. (உரி)

மனிதனுக்கு மனிதன் எந்த
வகையிலும் இழிவின்றிப்
புனிதமான தொண்டு செய்து
புலமை கொண்டு வாழவே. (உரி)

பஞ்ச மின்றி நோய்க ளின்றிப்
பாப மின்றித் தீயரின்
வஞ்சமின்றி லஞ்ச மின்றி
வறுமை யின்றி வாழவே. (உரி)

கட்டு மின்றிக் கவலையின்றிக்
காவலின்றி யாவரும்
சட்டமின்றித் தூயநெஞ்சச்
சாட்சி பற்றி வாழவே. (உரி)

காணும் சக்தி—சிவனைப் போலக்
காதல் வாழ்வில் ஒன்றியே
ஆணும் பெண்ணும் தேசமெங்கும்
அங்கைகோத் துலாவவே. (உரி)

அடிமை செய்யும் சட்டம் ஒழிய
ஆண்மை கொண்டு மீறுவோம்
துடி துடிக்கும் வீறுகொண்டு
துணிவுடன்முன் னேறுவோம். (உரி)

கொல்லும்ஆயு தங்கள் நாணக்
கோபத்தீ அணையவே
வெல்லும் ஆத்ம சக்தியுண்டு
விடுதலை உறுதியே (உரி)

## 50. சத்தியமும் அன்பும்

காபி ஆதி

சத்தியமும் அன்பும்—எந்தச்
சமயத்திற்கும் பொதுவாம்
ஒத்து வாழ லாகும்—மாந்தர்
உள்ளந் தூய தானல்

கீதையும் குரானும்—குறளும்
கிறிஸ்து நாதர் சொல்லும்
சாதி பேத மில்லா—சுத்த
சமரஸஸன் மார்க்கம்

இந்த மாநிலத்தில்—பிறந்தார்
எம்மவர்கள் என்போம்
பந்தமான சாதி—மதங்கள்
பழைய பொய்க ளென்போம்.

ஆருயிருக் கின்னல்—செய்தே
அமைதி சேர்வ தாமோ?
வேரை வெட்டி நீரை—விட்டால்
விளை கனிக ளாமோ?

ஒருயிர்க் குலமே—இந்த
உலகமென் றறிந்தால்
பேர்வடிவ பேதம்—பேசும்
பிரிவினைக ளுண்டோ?

## 51. ஸ்ரீராம ராஜ்யம்

ஸ்ரீராகம் ரூபகம்

பல்லவி

ஸ்ரீராம ராஜ்யம் வருகவே—இந்தச்
செகம் அகமகிழ் சுகம் பெருகவே (ஸ்ரீராம)

காருண்யமான மஹாத்மா—ஜய
காந்தி சந்த் சாந்தம் ஏந்தி (ஸ்ரீராம)

சரணங்கள்

கட்டு மின்றிக் கவலே யின்றிக்
கைவீசித் தலே நிமிர்ந்தே
ஒட்டுறவாய் உழைத்துப் பிழைத்தே—மாந்தர்
ஒட்டுறவாய் உழைத்துப் பிழைத்தே
உதய ரவியின் கதிர்போல் வாழவே (ஸ்ரீராம)

ஏழையின்றிக் கோழை யின்றி,
எதிரியின்றி இகலுமின்றி,
சூழும் ஆத்ம சக்தி துலங்கவே—வாழ்வு
சூழும் ஆத்ம சக்தி துலங்கவே—
சுத்த சுதந்தர நித்திய
சத்திய காவிய மாகவே (ஸ்ரீராம)

## 52. தேச சுதந்தர தியாகிகள்

பேஹாக் ஆதி

பல்லவி

தேச சுதந்தர தியாகிகள் சங்கம்
திருமிகு காங்கரஸ் ஜயம் ஜயம் பொங்கும் (தேச)

அனுபல்லவி

நாசம் செய்யும் எம பாசத்தினும் கொடிய
நச்சடி மையைச் செற்ற அச்சம் இல்லாத சிங்கம்
(தேச)

சரணம்

இந்து முஸல்மான் பார்ஸி கிறிஸ்துவர் சீக்கியர்
எல்லாரும் சேர்ந்திடும் ஏகரஸ சங்கம்
சந்ததம் பொதுநலச் சிந்தையும் செய்கையும்
தாரக மாகக்கொண்ட கர்ம வீரர் சங்கம் (தேச)

தொகையரு

திலகர் சரோஜனி லாலாஜி சிதம்பரம் பிள்ளை
புலவர் ரவீந்திரர் பாரதி ஐயர் மௌலானா அஜாது
நலமிகு தாதாபாய் வல்லபாய் தாஸ் ராஜன் ராஜாஜீ
உலகறி ஜவஹர் லால், நேதாஜீ சுபாஷ்போஸ்
உத்தம மஹாத்மா காந்தி ........ ....

சரணம்

பாழ்சிறை பட்டினி பயங்கரச் சட்டங்கள்
படுமோசக் குண்டுகள் சுடும்போதும் தளராமல்,
வாழி வந்தேமாதர மந்திரம் கர்ஜித்தே
வானுற ஜயக்கொடி வளம்பெற நாட்டிய (தேச)

## 53. திலகர் போற்றி

கமாஸ் ரூபகம்

**போ**ற்றி போற்றி லோக மான்ய
திலக போற்றி போற்றியே
பாரத விடுதலைக்குப்
பாய்ந்தெழுந்த சிங்கமே
மாரத மணி விளக்கே
மதிமிகு புலவனே (போற்றி)

அடிமைப் பேயைச் சுட்டனை—எம்
அச்சம் போக்கி விட்டனை
கொடுமையைக் குமைத்தனை—வெங்
கூற்றையும் எதிர்த்தனை (போற்றி)

சிறைகளைப் பொறுத்தனை
சிறுமையை வெறுத்தனை
மறைகளை விளக்கினை
மனத்திறல் படைத்தனை (போற்றி)

உண்மைக்கே உயிர்த்தனை
உலாவும் கீதை யாயினை
எண்ண எண்ண உன்னை நெஞ்சில்
ஏறும் தேசர் வேசமே. (போற்றி)

## 54. வீரச் சிதம்பரம்

மாயாமாளவகௌளம் ஆதி

வீரச் சிதம்பரம் பிள்ளை—அவன்
விடுதலை விடுதலை விடுதலை என்றே
தீரமுடன் பணி செய்தான்—சிறை
சென்றவன் செக்கும்இழுத்தான்—கவி
பாரதி பாட்டுரு வானன்—ஜய
பாலகங்காதர திலகன் வலக்கை—
நீராவிக் கப்பல் விடுத்தான்—தலை
நிமிர்ந்து நடக்கும் நிகரற்ற சிங்கம்...
எங்கள் சிதம்பரம் என்னில்—வீரம்
ஏறுது நெஞ்சினில்; சோருது துன்பம்
பொங்குதோர் ஆவேச வெள்ளம்—பரி
பூரணமான சுதந்தர வாழ்வுக்கு
வங்கம் அழைக்குது நம்மை—அதில்
வாழி சிதம்பரம் என்றிசைத் தாடும்
தங்கக் கொடி தோன்று தையே—தமிழ்
தந்த சிதம்பரம் சந்ததம் வாழ்கவே...

## 55. ஜய ரவீந்த்ர

கல்யாணி ரூபகம்

ஜய ரவீந்த்ர வரகவீந்த்ர
தாகூர் வாணி வாழ்கவே

பயமில்லாத சுதந்தரத்தில்
பரமானந்தப் பண்பொழிந்த (ஜய)

இடியும் புயலும் போலப் புல்லர்
இகலைப் புடைக்கும் வாணி
அடிமைத் துயரை வேரோ டறுத்தே
அமர ஞானம் அளிக்கும் வாணி (ஜய)

தலைநிமிர்ந்து பரத நாடு
தழைக்க உதித்த கவிதை
கலையுலகம் வியந்து போற்றக்
கதிர்பரவும் புதுமை வாணீ (ஜய)

## 56. முத்தினிலே வந்த

செஞ்சுருட்டி ரூபகம்

முத்தினிலே வந்த வைரமணி—எங்கள்
மோகன காந்தியின் ரத்னமவன்
சக்தி நிரம்பிய வித்தகனும்—ஜய
ஜவஹர் நேருவை வாழ்த்திடுவோம்.
அச்சத்தைப் போக்கும் மொழியுடையான்—அவன்
ஆண்மை கனலும் விழியுடையான்
வச்சிரம் போன்ற மனமுடையான்—ஜன
வசிய மான நடையுடையான்
தேச விடுதலைச் சிங்கமவன்—தியாகத்
தீயில் புடம்வைத்த தங்கமவன்.
நாசக் கொடும்புயல் சீறிடினும்—அதை
நகைத்து வென்றிடும் சூரனவன்.
ஏழைக் குதவிடும் தோழனவன்—உல
கெல்லாம் புகழ்அறி வாளனவன்

கோழை யடிமைத் துயரைக் குமைத்திடக்
குமுறிப் போர்செய் குரிசிலவன்
வீர சுதந்தர பேரியவன்—இந்த
மேதினிக் கேயுப காரியவன்
கூரிய நேரிய சீரிய ஆரியக்
கொற்றனவன் வாழ்க வெற்றிபெற்றே.

## 57. உலகினும் பெரியவனே

முகாரி ஆதி

பல்லவி

உலகினும் பெரி யவனே—மோகன காந்தி
உயிரினும் அரியவனே—மஹாத்மனே (உல)

அனுபல்லவி

கலக மில்லாமல் ஒரு குலமெனப் புவி வாழக்
கருணைக் கடலாய் வந்தாய்
மரண பயமும் வென்றாய் (உல)

சரணம்

கத்தியில் லாமல் ஆத்ம சக்திக் கனலினால்
கனிநகைப் பொறுமையால் கடுந்தவ விரதத்தால்,
சத்தியாக் கிரக மெனும், சமயசஞ் ஜீவியால்,
தந்தனை சுதந்தரம்
இந்தியத் தந்தையே (உல)

அறவலி கொண்டு நீ மறவலியை வென்றாய்;
அன்புப் பொதுநலத்தால் அமரனாய் நின்றாய்;
இறவும் உனக் குண்டோ இதயக் கோயிலில் வைத்தே
எல்லாரும் கும்பிடும்
ஏழைப்பங் காளனே. (உல)

## 58. எந்தை மஹாத்மா காந்தி

*சிந்துபைரவி* *ஆதி*

**பல்லவி**

எந்தை மஹாத்மா காந்தி தந்த ஜயக் கொடிக்கீழ்
எல்லாரும் இன்புறுவோம்—அன்புப் புதல்வர்
எல்லாரும் இன்புறுவோம். (எந்)

**அனுபல்லவி**

இந்து முஸல்மான் க்றிஸ்து என்னும் வித்யாஸமின்றி
இதயங் கலந்து வீர சுதந்தர நேயராய் (எந்)

**சரணம்**

ஊருக்குத் தொண்டு செய்வோம்—கைத்
தொழிலினால்
உழைத்தே பிழைத்திடுவோம்—மாந்தர்

யாருக்கும் அன்பு செய்வோம்—பொதுமொழியாம்
இந்தி படித்திடுவோம்—தீண்டாமை யின்றி

ஒற்றுமையைப் போற்றுவோம்—இராட்டை நூற்றே
உண்மைக் கதருடுப்போம்—எல்லாரும் கல்வி

கற்று முன்னேறிடுவோம்—கிராம ஸ்வராஜ்யம்
கண்டு கண்டு களிப்போம்— எந்த நாளும்

சாந்தமும் அஹிம்சையும் சத்திய விரதமும்
தாரக மந்திரமும் தர்ம வீரமும் கொண்டே(எந்)

## 59. வாழிய காந்தி மகாத்மா!

*நாதநாமக்கிரியை* *ஆதி*

வாழிய காந்தி மகாத்மா—நீடு
வாழிய வான்புவி வையமும் போலே (வாழிய)

ஊமையும் உப்பக்கம் காண்பான்—நர
 உடல் சுட்டு வீழ்ந்தாலும் கடமையைக்
 காப்பான்

வாழையடி வாழையாக—இந்த
 மண்ணிலம் வாழ்ந்திடப் புண்ணியஞ்
 செய்தான் (வா)

பாரத தேசத்தைக் காத்தான்—இந்தப்
 பாரினில் சத்திய ஜோதியாய்ப் பூத்தான்
காரினுங் கருணை மிகுந்தான்—அவன்
 கண்ணனின் கீதையாய்க்கண்ணெதிர்
 நின்றான் (வா)

கஞ்சிக் கழுது கலங்கும்—ஏழை
 கவலையற் றுண்ணக்கை ராட்டினந் தந்தான்
சஞ்சலம் அற்ற அஹிம்சை—என்னும்
 சஞ்சீவி யால்ஒரு சக்தி பிழிந்தான் (வா)

தன்னை விரதத்தால் வாட்டி—பொது
 தர்மத்தைக் காத்த தயாபரன் காந்தி
அன்னையின் வேள்விக் கனலில்,—தன்
 ஆவியினைப்புடம் வைத்தவன் காந்தி (வா)

கலியுகம் கண்டப்ரஹ லாதன்—ஜீவ
 காருண்ய புத்தன் கனிவுள்ள ஏசு,
மலையினும் மாண்புள்ள வீரன்—அவன்
 மனனுயிர் தன்னுயி ரென்ன வுயிர்த்தான் (வா)

பெரியவன் பேருபகாரி—அவன்
 பேரை நினைத்தாலே பெய்யும்விண் மாரி
ஹரிஜன ரக்ஷகன் காந்தி—அவன்
 அன்புள்ள சத்திய கர்மவே தாந்தி (வா)

ஏட்டில் எழுதிப் படிப்போம்—அவன்
 இன்னிசை சொல்லிநாம் இந்தியர் என்போம்

காட்டிய பாதையில் நடப்போம்—நிதம்
    கைதொழுவோம் மனக் கோயிலில்
        வைத்தே (வா)

## 60. ஜெய ஹிந்தென

மிச்ரபேஹாக் ஆதி

**ஜெய** ஹிந் தென முன் செல்வோம்—இந்த
    ஜகத்தினை அன்பினால் வெல்வோம்

பயபந்தனை துய ரில்லோம்—அருள்
    பாலிக்கும் நாமத்தைச் சொல்வோம்!

ஆற்றலை மிகமிக வளர்ப்போம்—என்றும்
    ஆண்மை ஆண்மை என உயிர்ப்போம்

கூற்றையும் போரினிற் குமைப்போம்—தேவர்
    குலத்தினை உலகினில் அமைப்போம். (ஜெய)

வகுப்புக் கலகங்க ளின்றி—சொல்
    மனஞ்செயல் அனைத்திலும் ஒன்றி,

தொகுப்புறப் பொதுநலம் புரியும்—வீர
    சுதந்தரத் தொண்டர்கள் யாமே. (ஜெய)

உலகினில் துடிப்பதெம் உள்ளம்—எம்
    உள்ளத்தில் துடிப்பதும் உலகே—

பலபல நாண்களுக் கோர்வான்—இந்த
    பலவகை உயிர்க்கொரு பகவான். (ஜெய)

## 61. பிறந்த நாடு

பரசு ஜம்பை

**பி**றந்தநாடு சிறந்து வாழப்
    பெருமை நாட்டுவோம்—உண்மை

அறிந்த தியாக வீரர் கூடி
அச்ச மோட்டுவோம்—நல்
அறத்தை நாட்டுவோம். (பிற)

தொத்தடிமைத் துயர் பொறுக்கும்
பித்தர் யாரினி?

எத்தருக்கிங் கேவல் செய்யும்
ஏழை யாரினி?—ஐயா
கோழை யாரினி (பிற)

தருமத்திற்கு வெற்றியுண்டு
சத்தியம் உண்டு

கரும வீர சக்தி யுண்டு
காந்தி வாக்குண்டு—அதை
ஏந்தி முன் செல்வோம் (பிற)

## 62. வானக் குடை நிழலில்

புன்னாகவராளி ஆதி

வானக் குடைநிழலில்—இங்கே
வாழும் உயிர்களெல்லாம்
ஞானக்கதிர் பரவி—எந்த
நாளும் முன்னேறுவோ?

கங்கை தவழுநிலம்—காவேரி
கனிகள் வழங்குநிலம்
தங்கம் விளையுநிலம்—வறுமையால்
சஞ்சலப் படுவானேன?

பஞ்சப் படுகொலையும்—ரண
பாதகர் கொள்ளைகளும்,
வஞ்சப் படுகொலையும்—பொல்லா
மதவெறிசெய் கொலையும்

அஞ்சப்படுகொலைகள்—உலகில்
அசுரத்தனங்களுமேனோ?
தஞ்சமளிப்பவனே—உனது
தண்ணருள் பொழியாதோ?

உள்ளம் பதறுதையா—எங்கள்
ஊனும் கதறுதையா
வெள்ளவிழிநீரைத்—துடைக்க
விதிகதி மதியில்லையோ?

## 63 சுகந்தாராய்

காணடா ஆதி

பல்லவி

சுகந்தாராய் ....... பரமா—எல்லாருக்கும்
சுத்த சுதந்தர நிரந்தரமாகிய (சுகந்)

அனுபல்லவி

இகந்தனில் பரந்தனை இலக்கிடும்—அருளினைத்
துலக்கிடும் துயர்களை விலககிடும்—பூரண (சுகந்)

சரணம்

காட்டுமிராண்டிப் பகைவர் கொடுமையின்றி
கருமவீரத்தால் மனக் கவலை ஒழிய வென்றே
நாட்டுக்கு நல்லதைக் கூட்டுறவால் செய்தே
நதிவளர் பயிரெனத் துதிவளர் உயிரென
சுதிவளர் இசையென நிதிவளர் தொழிலெனச்
(சுகந்)

## 64. தீய ஒளி

காம்போதி ரூபகம்

தீய ஒளி காட்டி யிந்தத்
தேசத்தி லேபடரும்
சாப வினை போக்கியருள்.
சன்மார்க்க வானொளியே!

நள்ளிர விலே வரிசை
நடக்கும் விண் ராசிகள்போல்
உள்ள பொருளைப் பணிந்தே
உயிர்ப்பவனி செல்லுகவே.

கார்முரசு கொட்டிவரும்
கருணைப் பெருக்காலே
போர்முரசு வாயடங்கப்
புதுவாழ்வு தந்திடுவாய்.

அகந்தோறும் பேசுகின்ற
அன்பே ஒரு மொழியாய்ச்
சகங்கூடி வாழுகின்ற
சன்மார்க்கம் தந்திடுவாய்.

இனச் சாதி வாதமின்றி
எல்லாருள்ளும் பேசும்
மனச்சாட்சி யின்வழியே
மன்னுயிர்கள் வாழியவே.

## 65. தேச பக்தர்

பேஹாக் — ரூபகம்

பல்லவி

தேசபக்தர் வாழ்கவே
தெய்வபக்தி கொண்டு தொண்டு
செய்யும் துய்ய மெய்ய ரான (தேச)

அனுபல்லவி

மாசிலாத மனவிலாசம்
வரம்பிலாத குணநலங்கள்
நேசமாகப் பழகு நீர்மை
நினைவுயர்ந்த வினையின் வீரர் (தேச)

**சரணம்**

சுடு துப்பாக்கி நீட்டினாலும்
துயரச் சிறையில் வாட்டினாலும்
விடுதலைச் சமரிற் சிங்க
வீரர் என்று பேரெடுத்த (தேச)

மேடைமாலை விளம்பரங்கள்
வேண்டிடாத தியாக தீரர்
கோடைமாரி பார்த்திடாது
கொள்கைக் கேற்ற தொண்டுசெய்யும் (தேச)

காந்தி போலச் சாந்தமாகக்
கருணையுள்ள புத்தர் போல
மாந்தரை நிகரென் றெண்ணி
மாநிலத்தில் வானைவித்தும் (தேச)

## 66. ஊருக்குழைத்திட

மோகனம் ஜம்பை

ஊருக்குழைத்திட வேண்டும்
உண்மைக்குயிர்தர வேண்டும்,
பாருக்கு நல்லது செய்தால்
பரமன் அருளும்வந் தெய்தும்.

மெய்யாரப் பாடுபடுவோம்;
வீண்பகட்டுகளை விடுவோம்
கையாரக் கைத்தொழில்செய்வோம்;
கண்ணாரக் கருணை வளர்ப்போம்.

நல்ல மனமுடன் சொல்லும்,
நடுநிலை யுள்ளமும் கொண்டே
எல்லாரும் எல்லார்க்கும் வாழ்வோம்;
எளிமையே வளமையென் றேற்போம்.

## 67. ஒன்றிய வாழ்வு

சாவேரி சாபு

பல்லவி

சீலமுட்டனுலகம் சேர்ந்து வாழவருள்
ஜீவமயமான சின்மயானந்தனே (சீல)

அனுபல்லவி

பாலுந் தேனும் போலே
பழமும் ரசமும் போலே
காலும் நடையும் போலே
கையும் விரலும் போலே (சீல)

சரணம்

கனவுங் கலையும் போலே,
கண்ணும் கண்ணும் போலே
மனமும் நினைவும் போலே,
மறையும் பொருளும் போலே சீல

மதியும் நிலவும் போலே
மலரும் மணமும் போலே
நதியும் கடலும் போலே
நானும் நீயும் போலே (சீல)

## 68. கனவு நனவாமோ!

நீலாம்பரி ரூபகம்

கனவு நனவாமோ—உலகம்
கடவு ளரசாமோ?
மனதும் விண்ணுமோ—மாந்தர்
வாழ்வும் பொன்னுமோ?

துன்பச் சோர்வின்றி—கலை
துலங்கும் காவியமாய்

அன்புச் சோலையிலே—ஆண்பெண்
ஆடி மகிழ்வாரோ?
சித்தத் திரையினிலே—சுழலும்
சித்திரச் சுருள்கள்
அத்தனையும் அழகின்—அருவி
யாக விளங்காதோ?

மங்கல வசந்தம்—குயிலிசை
வாக்கில் வளராதோ?
திங்களும் சூரியனும்—கனலும்
சேர்ந்து திகழாவோ?

அலைகள் மோதிவந்தே—நதிகள்
ஆனந்த சாகரத்தில்
கலந்து போவதுபோல்—தெய்வக்
காதலிற் கூடாவோ?

## 69. நடனம் புரிவோம்

நவரோஜ் ஆதி

நடனம் புரிவோம் நாடெல்லாம்—இந்த
ஞாலப் பெருமான் அருளுடனே
தட்தம் தகஜம் ததிங்கிணதோம்
தகதரி கிடதக ஜம் எனவே (நட)

தமிழின் அமுதச் சுவை பாடத்
தாவுங் கடலும் முழவொலிக்க
அமரக் கங்கைச் சடையாட
அபயக் கரத்தின் ஆசியினால் (நட)

ஆத்மானந்தக் கோயிலிலே
அன்புள்ளங்கள் கைகோத்தே
பூத்தமலர்போல் புன்னகைத்தே—
பொங்கும் பரவசச் சிங்கம்போல் (நட)

## 70. எட்டுத் திக்கும்

மாண்டு ஜம்பை

எட்டுத் திக்கும் இசைமணக்க
இலக பாரதம் ............
கட்டிலாத கவிதைபோலக்
காற்றைப்போலச் சுதந்தரமாய் (எட்)

தீத்தணலைப் போல வீர
தீரங் கனல்கவே
ஆத்திரப் பகைக்குலங்கள்
அஞ்சி ஓட, அன்புவாழ்க. (எட்)

கண்ணுங் கருத்தும் சொல்லும் செயலும்
கலந்த புலமையால்
பண்ணும் பணியும் பயனுங்கொண்டு
பரமசாந்த வரமளித்தே (எட்)

சுதியும் பாட்டும் லயமும் போல
சுத்தமுக்த சமரஸத்தில்
புதிய பாரத சமூகம்
பொலிக பொலிக நலிக தீமை. (எட்)

## 71. வெட்டு மின்னல்

கரகரப்ரியா ஜம்பை

வெட்டு மின்னல் போல வீசி
வீரங் கிளர வெற்றிஒளிர
கட்டுகளைச் சுட்டெரித்து
கவலையற்ற சுதந்தரத்தில்
வாழ்க மாந்தரே—என்றும்
வாழ்க சாந்தமாய் ....

நள்ளிரவைப் பிளந்து பிளந்து
நர்த்தனம் செய் மின்னல் போல
கள்ள மாயத் துயரைப் பிளந்து
காலைஒளியிற் கலந்து கலந்து (வாழ்க)

பயனிலாத பழைய கனவைப்
பதரென ஒதுக்கித்தள்ளி
நயமிகுந்த புதிய புதிய
நன்மைசெய்யத் திண்மையாக (வாழ்க)

## 72. மூவுலகும்

பேஹாக் திஸ்ர ஏகம்

மூவுலகும் வெல்ல வல்லோம்
முறுக்கு மீசையை
தாவும் வீர பேரிகொட்டித்
தருமக் கொடிபிடி.

குழிமுயலைப் போலக் கூசிக்
கூசிப் பதுங்கிடோம்
அழியரக்கர் அழியப்போர்செய்
அமரர் வாழவே!

வழவழாக்க ளின்றித் தூய
வாய்மை கூறுவோம்
விழலைவெட்டி யெறிந்து புதிய
விளைவு செய்குவோம்.

பொதுஜனங்கள் ஆளுகின்ற
புதிய பாரதம்
புதுயுகத்தின் வல்லரசாய்ப்
பொலியப் பணிசெய்வோம்.

## 73. நல்ல குடியரசு

ஆனந்த பைரவி ஆதி

நல்ல குடியரசு நாட்டினோம்—ஜன
நாயக சக்தியினைக் காட்டினோம்
வல்லரசு தொல்லரசு பாரதம்—நீடு
வாழ்க! ஜயமுரசு கொட்டுவோம்.

புல்லுருவிப் புதர்களை நீக்குவோம்—இங்கே
புதிய கலைவனத்தை ஆக்குவோம்
எல்லைகளில் வல்லபடை கூட்டுவோம்—வரும்
இகலைப் புகல்கெடுத்தே ஓட்டுவோம்.

பழைய கொடுமையினி அண்டவோ—பாழும்
பஞ்சப் பிணி துயரந் தீண்டவோ?
தொழிலும் அறிவும் வீரத் தோள்களும்—ஆத்ம
சுதந்தர பாரதத்தை ஆளுமே.

ஈனச் சிறுமைகளைப் போக்குவோம்—நம்
எண்ணத்தை இமயமென ஆக்குவோம்
வானத் திருக்களெல்லாம் போற்றுவோம்—நம்
வாழ்வை அமரநிலைக் கேற்றுவோம்.

(நல்ல)

## 74. பொங்குக பொங்குக

காபி ஆதி

பொங்குக பொங்குக மங்கள வளமே
புண்ணிய சுதந்தர பாரத பூமி
பொங்குக கலைவளம் பொங்குக செல்வம்
பொங்குக தொழில்வளம் புகழ்பெற நாளும்

மடவிருள் மனவிருள் மதியிருள் ஒழிக!
மலருக அறிவெனு மாணிக்க ஜோதி
இடமகல் உலகினில் இன்பமே நிறைக
ஈகையுந் தியாகமும் இரக்கமும் வளர்க!

சத்திய ஒழுக்கமும் சமதையும் அன்பும்
சாதுக்கள் சங்கமும் சாதன வாழ்வும்
பக்தியும் ஞானமும் பண்புள பணியும்
பலமுடன் வீரமும் நலமுறப் பொலிக!

எந்தாய் வாழ்கென மந்திரஞ் சொல்லி
இவ்வுல கன்னையை இதயத்தில் நினைப்போம்.
சிந்தனைச் சிகரத்திற் சீவனை உயர்த்திச்
சீரிய கனவினைச் சிறப்பஞ்செய் துவப்போம்.

## 75. தொண்டு செய்

தர்தலவராளி திஸ்ரஏகம்

**தொண்டுசெய்! தொண்டுசெய்!! தொண்டுசெய்!!!**

படபடப்பி லாமலே
பயந்து சோர்ந்தி டாமலே
துடிதுடிக்கும் அன்புடன்
துணிந்த வீரத் தொண்டுசெய்.

விடுதலைக்கு விடுதலை
வெற்றிகொண்டு முன்செலச்
சுடுதுப்பாக்கி முனையிலும்
தோல்வியற்ற தொண்டுசெய் .......

வஞ்சமறற நெஞ்சுடன்
வறுமையற்ற தொழிலுடன்
பஞ்சமற்ற வளமுறப்
பாடுபட்டுத் தொண்டுசெய்.

நெற்றிவேர்வை சொட்டவே
நிலங்கனிந்து கொட்டவே
சுற்றமுன்னை வாழ்த்தவே
சுறுசுறுப்பாய்த் தொண்டுசெய்

பேச்செலாம் செயல்களாய்
பெரியநன் மனதுடன்

முச்செலாம் முயற்சியாய்
முனைந்து தேசத்தொண்டுசெய்.

## 76. செல்வ மழை

தேஷ் ஆதி

செல்வ மழை பொழிய வேண்டும்—நம்
தேச வளம் பெருக வேண்டும்
நல்ல தொழில் வளர வேண்டும்
நாத முரசொலிக்க வேண்டும்.

இந்திய நாடு நம் உயிரே—அதன்
இன்னுயிர் ஆவது பயிரே
முந்ததை விளைத்திடு வோமே—நல்ல
முயற்சியால் முன்னேறு வோமே.

வேகநல் லருவிக ளாலே—பல
மின்சாரப் பொறிகளைச் சுழற்றி
போகபோக்கியங்கள் அமைப்போம்—பஞ்ச
பூதங்கள் சக்தியைச் சுரக்கும்.

ஏழையும் கோழையும் இல்லை—இனி
ஏக்கமும் தூக்கமும் இல்லை
ஆழியும் இரவியும் போலே—நாம்
ஆருல கின்புற உழைப்போம். (செல்வ)

## 77. மூடப் பழக்கம்

செஞ்சுருட்டி ஆதி

மூடப்பழக்க வழக்கம்—எந்த
மூலை முடுக்கிலும் இன்றி
ஓட விரட்டி யடிப்போம்— மாந்தர்
ஒன்ருக நன்ருக வாழ.

நாட்டைப் பிரித்திடும் சாதி—தெய்வ
நலத்தைக் கெடுத்திடும் லீலை

வீட்டைக் கெடுத்திடும் சடங்கு—போலி
வேடங்களெல்லாம் ஒழிப்போம்.

ஆயிரம் சாதிகள் வேண்டோம்—பதி
ணுயிரம் பீடங்கள் வேண்டோம்
ஆயிரம் கட்சிகள் வேண்டோம்—இனி
அன்பினில் ஒன்ருக வாழ்வோம்.

கோட்டுக்கும் சூட்டுக்கும் குனியோம்—செல்வ
குருமடச் சண்டைகள் வேண்டோம்
ஏட்டுக்கு மூடுமந்திரங்கள்—இல்லை
என்போம் பயத்தை வெறுப்போம்.

## 78. வீர கர்ஜனை செய்

உசேனி ஆதி

வீர கர்ஜனை செய்—மனிதா
வேத கான முடனே
போரிற் சிங்கம் போலே—கனல்
பொங்கப் பகை நடுங்க. (வீர)

வீர கர்ஜனை செய்—களி
விம்மும் ஆழிபோலே
காரளாவும் இடிபோல்—வஞ்சர்
கலங்க நேர்மை துலங்க. (வீர)

உதய வானம் போலே--உன்
உள்ளம் சாந்தமாகி,
புதிய வாழ்க்கை தோன்ற—இந்தப்
பூமி ஒன்று சேர. (வீர)

அவஞ்செய் மாயமினறி—உலகை
அஞ்சும் கோழை யின்றி
சிவஞ்செய் சக்தியாலே—ஆண் பெண்
செஞ்சுடர்போல் வாழ்வோம். (வீர)

காற்றைப்போல உலவி—பூங்
காவைப்போல உதவி
ஆற்றைப்போலப் பாடி—கலையின்
அழகைப்போல வாழ்வோம். (வீர)

இமயம் போலத் தோளும்—அன்னை
இதயம்போல நெஞ்சும்
தமிழைப்போலச் சொல்லும்—கொண்டு
சரிநிகராய் வாழ்வோம். (வீர)

செய்யும் செய்கை வெற்றி—நாம்
சேர்ந்த வாழ்க்கை வெற்றி
வையமெங்கும் இன்பம்—என்றே
மங்களங்கள் பாடி. (வீர)

வீரகர்ஜனை செய்—மனிதா
வேதமுரசு கொட்டி
வீரகர்ஜனை செய்—மனிதா
விண்ணை மண்ணிற் கண்டே. (வீர)

## 79. கண்கள் விழித்தெழுந்தோம்

ஜாண்டு திஸ்ரஏகம்

கண்கள் விழித் தெழுந்தோம்—மூடக்
கட்டைப் பிளந் தெறிந்தோம்
பெண்கள் தலை நிமிர்ந்தோம்—அஞ்சும்
பேதமை யைக் களைந்தோம்.

கோழைத்தனம் விடுத்தோம்—வீரக்
கோபுரம் போலுயர்ந் தோம்
ஏழையர் பேதையர்கள்—என்னும்
ஏச்சினி யில்லை யென்போம்....

கற்றுக் கலைவளர்ப்போம்—பின்பே
காதல் மணம் புரிவோம்

ஒற்றுமையை வளர்ப்போம்—எங்கள்
உள்ளும் உலகினிலும்....

வஞ்சப் பழங்கொடுமை—எங்கள்
வாழ்வை யழிக் காமல்
மஞ்சளும் குங்குமமும்—பொங்கப் புது
மலர்மகள் போலிருப் போம்.

கைம்பெண்மை யில்லையினி—மூலை
காக்கும் கொடுமை யில்லை
ஐம்புல வெங்கணைகள்—கூந்தல்
அற்றிடின் அஞ்சிடுமோ?

மானிட வாழ்வினுக்கே—பெண்கள்
மங்கள சக்தி யன்றோ?
ஏனினி வேற்றுமைகள்—கதிர்
இனறி இரவி யுண்டோ?

பிலகரி—ஆதி

நல்லகாலம் பிறந்தது வாருங்கள்—தோழிமாரே
நமது வீர சுதந்தர நாளிது—தோழிமாரே
அல்லிமென கரம் கொட்டி நடஞ் செய்வோம்—
தோழிமாரே
ஆணும் பெண்ணும் சரிநிகர் என்னுவோம்
—தோழிமாரே

கன்னியர்க்கொரு நீதிபிறந்தது—தோழிமாரே
கால சக்கரம் மாறிச் சுழன்றது—தோழிமாரே
மின்னிடையில் விடுதலை மின்னுது—தோழிமாரே
வேடன் கைக்கிளி போலினி வாழ்ந்திடோம்—
தோழிமாரே.

## 80. காதலிலே

யதுகுலகாம்போதி நுபகம்

காதலிலே சொக்குகின்ற
கனவினிலே பூத்தேன்—வீரக்

காளையரின் மார்பினிலே
கவர்ச்சியுடன் மலர்ந்தேன்

மாதரிளம் புன்னகைசெய்
மதிமுகத்திற் கனிந்தேன்
மானிலத்தில் வாழ்க்கையென
மங்கலமாய்ப் பொலிந்தேன்...

சிற்பிகளின் உளியினின்றே
சிலைகளை நான் வடித்தேன்
சிந்தனைசெய் கவிகளின்சொற்
சித்திரத்தை வரைந்தேன்

அற்புதமாய் நடம்புரியும்
அணிமயிலாய்த் திரிந்தேன்
ஆனந்த யாழெனவே
அறிவினிலே தவழ்ந்தேன்....

மேகத்திலே மின்னலென
வேகநடை பயின்றேன்
வேலையெனக் கரை மணலில்
வேதமொழி வரைந்தேன்.

ஊகத்திலே உருவமைத்தே
உயிர் கொடுக்கும் சக்தி
உலகையெல்லாம் ஆக்குகின்ற
கலையழகி நானே....

## 81. கலையழகி வந்தாள்

வசந்தா ரூபகம்

கலையழகி வந்தாள்—என்
கண்கள் குளிர்ந்திடவே
மலையருவி வளர்—புது
வசந்தச் சோலையைப்போல் (கலை)

கலையழகி வந்தாள்—அன்பு
கனி முறுவலுடன்
அலையுந் தென்றலிலே—குழலிசை
ஆடி வருவதுபோல் (கலை)

வானமுதம் பொழியச்—செழித்து
வளர் பயிரினைப்போல்
மேனி சிலிர்த்திடவே—நவரஸ
மின்சாரம் வீசிடவே! (கலை)

தேனும் கனிரசமும்—போலத்
தீஞ்சுவைப் பாட்டுடனே
வானக் கதிரினைப்போல்—புது
வாழ்க்கை புலர்ந்திடவே. (கலை)

## 82. பொங்குக தேன்வளம்

உசேனி ரூபகம்

**பொ**ங்குக தேன்வளம் பொங்குக பால்வளம்
பொங்குக வான்வளம் பூமி யெல்லாம்
மங்கள மான சுதந்தர பாரதம்
மகிழக் கும்மி யடித்திடுவோம்—புவி
புகழக் கும்மி யடித்திடுவோம்.

சோலைக் குயிலங்கே கூவுதம்மா—கன்று
துள்ளித் துள்ளி விளை யாடுதம்மா
காலை வசந்தம் உலாவு தம்மா—அன்னம்
கமலப் பொய்கையில் ஆடுதம்மா.

எங்கும் பசுமையும் பொன்னும் குலுங்கிடும்
இயற்கை யின்பத்தைப் பாருமம்மா
அங்கசைந் தோடிடும் அருவிப் பாட்டினில்
ஆனந்த நீராட வாருமம்மா.

எட்டெட்டுத் திக்கிலும் எல்லா உயிரிலும்
எங்கள் உயிரே துடிக்கு தம்மா

கட்டற்ற சிட்டுக் குருவியுடன் மனம்
காதல்விண் ணேறிப் பறக்குதம்மா.

செந்தமிழ் ஆகிய தேனிசை யாழொலி
தென்றலுடன் வந்து கொஞ்சுதம்மா
இந்திய நற்கலை இன்ப மணம் வீசி
இவ்வுல கெல்லாம் பரவுதம்மா.

## 83. பொலிவான பூமியிலே

புன்னுகவராளி — ரூபகம்

பொலிவான பூமியிலே—அண்ணே
பொன்னான நெல் விளைப்போம்!
சலியாது பாடுபட்டே—அண்ணே
தரையை விண்ணாக்கிடுவோம்!

வானம் பொழியுதடா!— நல்ல
வயலும் விளையுதடா!
ஈனம் விலகுதடா!— அண்ணே
ஏதினிப் பஞ்சமடா!

நஞ்சைச் சம்பாவுடனே—வாழை
நல்ல கரும்பு ரசம்!
புஞ்சை தினையுடனே—கூட்டிப்
புசிப்போம் ருசித்திடவே!

சோம்பலை விட்டொழிப்போம்—அண்ணே
தொழிலே பேரின்பமடா!
நாம் பாடு பட்ட பலன்—இந்த
நாட்டுக்கு நல்லதடா!

சும்மா இருந்துண்ணும்—செல்வத்
துரைகாலம் போச்சுதடா!
இம்மா நிலந்தனிலே—இனி
ஏழை பணக்காரன் என்பதில்லை!

## 84. தொல்லுலகத்தை

செஞ்சுருட்டி ஜம்பை

அலெக்சாந்தர்

தொல்லுல கத்தைத் துறந்தனே—ஒரு
தொட்டியே வீடான சாமியே
நல்ல மனிதனைத் தேடவே—நீ
நண்பகலில் விளக் கேந்தினே.

உள்ளங்கையால் வாங்கி யுண்டனே—இந்த
ஊருடன் ஒட்டாமல் வாழ்ந்தனே
எல்லாம் வெறுத்ததோர் ஞானியே—கேள்
ஏது விரும்பினும் ஈகுவேன்.

தியாஜினன்

பொன்வெறி மண்வெறி கொண்டனே—நிதம்
போர்செய்து பாரை வதைத்தனே
தன்னலப் பேய்களைப் போற்றினே—மனத்
தாகந் தணியாத பேதையே

உன்னிடம் யாதொன்றும் வேண்டிலேன்—அதோ
ஓங்குயர் வானக் கதிரவன்
தன்சுடரைப் பொழிகின்றனன்—அதைத்
தடுக்காமல் அப்புறம் செல்லப்பா.

## 85. வாழிய கிறிஸ்து

காபி ஆதி

வாழிய கிறிஸ்துவின் மலையுபதேசம்
வாழிய மனந்தொறும் ஞானப்ர காசம்
வாழிய பரமபிதா தரும் அருளே
வாழிய உலகினில் வானர சாட்சி.

எளியவர்க் கிரங்கிடும் இதயங்கள் வாழ்க!
இன்னலைப் பொறுத்திடும் திண்மையர் வாழ்க!
தெளிமிகு சாந்தர்கள் சீர்பெற வாழ்க!
மாசறு தூயவர் ஈசனைக் காண்பார்
மறுவறு சாதுக்கள் மாநிலம் புரப்பார்.
தேசுறு சிலுவையில் நேசத்தை நாட்டும்
தியாகிகள் வாழிய யோகிகள் வாழ்க!
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினர் வாழ்க!
தகைபெறும் சத்திய சத்குணர் வாழ்க!
தீமையை நன்மையால் திருத்துவோர் வாழ்க!
திருவருள் ஆட்சியைத் தேடுவோர் வாழ்க!
உற்றவர் போலவே அற்றவர்க் குதவும்
உத்தமர் வாழிய உலகினி தோங்க!
ஒற்றுமையாகிய உள்ளங்கள் வாழ்க!
ஒளிருக பரஞ்சுடர் ஓங்குக நலமே!

## 86. சமாஜம்

காபி ஆதி

பாரத சுதந்தர நாளே

பாரத சுதந்தர நாளே—இது
பாருக்கெல்லாம் திருநாளே
போரொலி யடங்கிய நாளே—சாந்தப்
புதுயுகம் பிறந்தநன் னாளே.

ஆண்டவனே நம் ஆண்டான்—யாரும்
அடிமையில்லை இந்த உலகில்
வேண்டோம் பலம்த வாதம்—அன்பு
விளைந்திடும் பொதுநலம் போதும்.

வாளுடன் வாள் புகை கொண்டே—ரத்தம்
வடித்திடும் இடிபுயல் வேண்டோம்

தோளுடன் தோளிணை கூடி—நல்ல
தோழராய் உலகினர் வாழ்வோம்.

தொழிலினையே வழி படுவோம்—எல்லாரும்
தொண்டரென்றே கொடிநடுவோம்
எழில்பெறுங் கலைகளை வளர்ப்போம்—இங்கே
இரவும் பகலும் அதற் குழைப்போம்.

தங்கத்தின் காலடி பணியோம்—அற்பத்
தனங்களைக் கனவிலுங் கருதோம்
சிங்கத்தைப் போல்நிமிர் வோமே—புகழ்ச்
சிகரத்தில் நடம்புரி வோமே!

## 87. நல்லது

தேஷ் ஆதி

பல்லவி

நல்லது நினைப்போம் நல்லது சொல்வோம்
நல்லது புரிவோம் நண்பரே! (நல்ல)

அநுபல்லவி

எல்லா மதங்களும் எல்லா மறைகளும்
இயம்பிடும் உபதேசம் இதுவே பொதுவே (நல்ல)

சரணம்

சிந்தையிற் கடவுளை வந்தனை செய்வோம்
சீவ சமூகத்திற் சிவமயங் காண்போம்.
எந்த வுயிருக்கும் இரங்கி யுதவுவோம்
எவரையும் பகைத்திடோம்
இகலெமக் கில்லையே. (நல்ல)

பிறர்மனை தாயெனப் பெருமையாய் மதிப்போம்
பிறர்பொருள் ஓடெனத் துறவுடன் நடப்போம்
அறமுடன் வாய்மையும் அருளுடன் காப்போம்
ஆன்ம நேயவழி ஐக்கியப் படுவோம் (நல்ல)

## 88. போற்றி போற்றி

பேஹாக் ஆதி

**போ**ற்றி போற்றி பராசக்தி தாயே
புதல்வர் செய்திடும் பூசனை கொள்வாய்
ஆற்ற லும்அறி வுந்திரு ஓங்கும்
ஆத்ம சக்தியும் ஆயுளும் ஈவாய்.

அன்னை ஓம் சக்தி என்கிற போதே
அமுதம் ஊறுமெம் ஆவியி னுள்ளே
மின்னைப் போலஉன் அன்புமின் சாரம்
வினையின் வெற்றி விளக்கிடுந் தாயே.

சிங்க நெஞ்சும், சிலையெனத் தோளும்,
தீர வீர பராக்ரம வாழ்வும்
தங்க மேனியும் சத்திய வாக்கும்,
தரும சித்தியும் தந்தெமை யாள்வாய்.

எங்கு நோக்கினும் உன்முகங் காணும்
இன்பம் வேண்டும் இதயத்தில் ஊறும்
பொங்கும் ஆனந்தப் புன்னகைத் தேனே!
பூங்கை ஆசி பொழிந்தெமைக் காவாய்!

## 89. காவாய் கருணைக் கடலே

கேதாரம் ஆதி

**கா**வாய் கருணைக் கடலே—என்
கதியே புகலே சரணம்
தேவா ஜீவா தாரா—என்
சிந்தைக் கின்பம் நீயே. (கா)

என்னை இடர்செய் தீமை—ஐய
இன்றே டொழியத் துணைசெய்
இன்னல் செய்யும் முரடர்—இனி
இங்கே தலைக்காட் டாமல் (கா)

முன்னே உருமும் புலிகள்—கோள்
மூட்டும் வஞ்ச நரிகள்
பின்னே சிரிக்கும் பேய்கள்—இனம்
பிரிக்கும் எத்தர் குமைய (கா)

இகமும் பகைவர் முன்னே—ஹே
இறைவா உனை நான் இசைத்தேன்
புகமுற திருவும் பெறவே—உலகப்
போக்கை மாற்றத் துணைசெய். (கா)

## 90. பல்லாண்டு பல்லாண்டு

கேதார கௌளம் ஆதி

பல்லாண்டு பல்லாண்டு வாழ்க—எங்கள்
பாரத தேசம் பரிதியைப் போலே (பல்)

வல்லர சென்ன வளர்ந்தே—இந்த
வையத்திலே அறம் வாழ உயர்ந்தே .... .... ....
நல்லன யாவையும் சுரந்தே—இன்ப
நாயகியாய், அனபுத் தாயகமாக (பல்)

எட்டெட்டுத் திக்கிலும் வீசும்—இவள்
இதயக் கனலின புதிய சுடரைக்
கட்டுப் படுத்துவார் யாரே—அதைக்
கண்டுணர் தீரர் கடவுளாவாரே (பல்)

அன்னிய மாயங்கள் வருமோ—இனி
அரக்கரின் சூழ்ச்சிகள் அச்சந் தருமோ
தன்னிக ரற்றதோர் சக்தி—தன்னைத்
தந்தெமைக் காப்பவள் இந்தியத் தாயே (பல்)

நாசப் பகைக்குலம் வீழ—எல்லா
நாட்டினரும் ஒரு கூட்டுற வாக
ஆசிய ஜோதி விளங்க—என்றும்
அமரத் தன்மைதரும் அன்னை எம் அன்னை (பல்)

அருளினால் உரிமையைப் பெற்றாள்—தன்
ஆத்மசக்தி உலக காண்டிடக் கற்றாள் ...
இருளினை ஓட்டிடும் இரவி—எங்கள்
இந்தியத் தாய் வேத மந்திர அருவி. (பல்)

## 91. நீடு வாழலாம்

மலயமாருதம் — ஆதி

நீடு வாழலாம் நிலமிசை பெறலாம்
வீடெனச் சொல்வதை வீதியில் பெறலாம்.
ஊழ்வினை தனையும் ஊதி எறியலாம்
ஆழ்வினை செய்யும் ஆற்றலைத் தரலாம்.
வஞ்சக மில்லா நெஞ்சகம் வேண்டும்
அஞ்சாவுறுதியும் அன்பும் வேண்டும்.
பொல்லதை நீக்கி நல்லதைச் செய்மின்.
எல்லாருக்கும் இன்பமே கருதுமின
போரை மூட்டும் போட்டி பொறாமை
ஊரைக் கெடுக்கும் ஓயாப் பிரிவினை
ஆளைக் கெடுக்கும் ஆசை வெறிகள்
நாளைக் கெடுக்கும் கோள்சின வம்புகள்
ஒழிக! உலகில் ஒற்றுமை ஓங்குக!
மதவெறி யின்றி மகான்களை யறிக.
பொதுநல மாகப் புரிதொழில் புரிக.
தன்னை யறிக தலைவனை யறிக
காந்த முனைபோற் கலந்து வாழுக.
நீடு வாழலாம் நிலமிசை
நாடும் தெய்வ நலம்பெற லாமே.

## 92. நல்ல குடியரசு

செஞ்சுருட்டி — ஆதி

நல்ல குடியரசு வந்ததே—அது
நயமாய்க் காந்திமகான் தந்ததே!

வல்லர சாகி யது வாழ்ந்திட—வீரர்
வாரீர் வெற்றியிசை சூழ்ந்திட !
புல்லுருவிப் புதர்களைப் போக்குவோம்—இங்கே
புதிய புதிய கலை ஆக்குவோம் !
எல்லைகளில் வல்ல படை நாட்டுவோம்—வரும்
இகலைப் புகலின்றி ஓட்டுவோம் !
பழைய கொடுமைகளை நீக்குவோம்—பாழும்
பஞ்சப் புரட்சிகளைப் போக்குவோம் !
உழைப்பைப் பொதுக் கடமையாக்குவோம்—
இந்த
உலகில் தொழிலரசை ஊக்குவோம் !
வானத் திருக்களெல்லாம் போற்றுவோம்—சக்தி
வளரும் திறமைகளை நாட்டுவோம் !
ஈனச் சிறுமைகளை ஓட்டுவோம்—நம்
இசையை வானுயர நீட்டுவோம்.

## 93. நிரந்தரம்

மோகனம் ஆதி

**பல்லவி**

நிரந்தரம் அருள்புரி பரம்பொருளே
நீடூழி பாரதநாடு நலம்பெறவே. (நிர)

**அனுபல்லவி**

பரந்த கலைகளுடன் சுரந்து நவநிதியும்
சிறந்த புகழுடனே நிறைந்த
வளம்பெறவே (நிர)

**சரணம்**

மானிட வாழ்வுக்கே ஆன்மஒளி காட்டி
மறவழி யரக்கரை அறவழியால் வீட்டி
ஊனிடை உயிரென வானிடைச் சுடரென
உலகமெல்லாம் உய்யும் அன்பு
பொலிய யோக போக சக்தி ! (நிர)

**ஜய பாரத சக்தி ! வந்தேமாதரம் !**

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1534
நன்கொடை எண்: 1534
காமராசர் பல்கலைக்கழக ... அவ்வை சண்முகம் நூலகம்

புதுயுக நிலையம்

புதுச்சேரி

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.